சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:

# சைவசித்தாந்தப்பிரசங்கக்கோவை.

நாகை வெளிப்பாளையம்

சைவசித்தாந்தசபையில்

ஸ்ரீமத் - சோ - வீரப்பசெட்டியாரவர்கள்

செய்த பிரசங்கங்களையெல்லாம்,

அச்சபாங்கிகளிலொருவராகிய

ஆ - மதுரைநாயகம்பிள்ளையவர்கள்

தொகுத்தது.

சென்னைப்

பண்டித மித்திர யந்திரசாலையில்

அச்சிடுவித்தனர்.

1902.

உ

சிவமயம்.

# பரமேஸ்வரனது

# பிரபுத்துவம்.

"ஆடகசிதம்பரஅணங்குமையிணங்கிலா
நாடகனனந்தசுகநன்குபுனேபங்கிஞ
ளேடகமணம்பொருவவெங்கணுமிசைந்துளாள்
பாடகமிலங்குசிறுபங்கயமிறைஞ்சுவாம்."

## பிரபுஇலட்சணமாவது.

சகலசம்பத்தையுமுடையவனுக்குச் சம்பன்னனென்றே பேர். பிரபுவென்றபேரில்லே. வித்தையையுடையவனுக்கு வித்துவானென்றே பேர். விவேகியென்றபேரில்லே. கொடுக்குந்தகைமை யுடையவர்கட்கே தாதாவென்றும், பிரபுவென்றும், வள்ளலென்றும் பேர். வள்ளற்றன்மை கடைவள்ளல் இடைவள்ளல், தலைவள்ளல் என மூன்று தன்மையாயிருக்கும். கடைவள்ளலின் தன்மை தன்னிடத்துவந்து இரந்தவர்கட்கு இல்லேயென்னுமற் கொடுப்பது. கர்ணராஜனைப் போல; (திருக்குறள்) "இலன்என்னுமெவ்வமுரையாமையீதல்-குலனுடையான்கண்ணேயுள." "இரக்கப்படுதேலுமின்னுவிரந்தவர் - இன்முகங்காணுமளவு." இடைவள்ளலின் தன்மை ஒருவன் தன்னிடத்து வந்து இரவாமல் அவன் குறிப்பறிந்து ஈதலே இடைவள்ளலின் றன்மை அது கற்பகத்தரு.

(நைடதம்நளன்றூதுப்படலம்.)

"குறிப்பறிந்தீதலேகொடைமற்றின்றெண
மறுத்தலேகேட்டபின்வழங்கலாகுமாற்
பெறற்கருமாவியும்பெட்புமீகுவன்
திறப்படவிவருளந்தெரிந்ததில்லேயால்."

தலைவள்ளலின்றன்மை, இரவலன் தனக்குவேண்டுவது இன்னதென்று கருதாமலும் தான் இருக்குமிடத்திற்செல்லாமலும் அவ்விரவலன் ஒரிடத்திலிருக்க அவனுக்குவேண்டுவன யாவும் ஒரு[illegible] கொடுத்தலும், மற்றொருவரை அவன் இனியிர[illegible]

கொடுக்கும் பொருள் அந்த இரவலனது ஜீவதசைபரியந்தம் உதவும்படி கொடுத்தலுமேயாம். இத்தகைமையுடையவனே தலைவனெனல். ஒருவன் கொடுக்குந் தகைமையுடையவனாயினும், தன்வலிக்குட்பட்டவைகளைக் கொடுக்கலாமன்றித் தன்வலிக்குட்படாப் பொருளை யெவ்விதம் கொடுக்கக் கூடும்? ஆகையால் அப்பிரபுவினது ஐஸ்வரியம் இத்தன்மையுடைத்தென்று அறியவேண்டும்.

## அண்டப்பிரமாணம்.

ஐஸ்வரியசம்பந்தம் ஈஸ்வரம். சர்வைஸ்வரியமு மொருங்கே யுடையவர் பரமேஸ்வரர். அதாவது பஞ்சபூதபௌதிகமும், ஆத்மகோடிகளும், தேவர், முனிவர் முதலியோரும் வசிக்கும்பதவிகளும், பதினான்குலகமும் அடங்கியது அண்டம். ஓர் அண்டத்தினது பிரமாணமானது நூறுகோடி யோசனை அகலமும் நூறுகோடியோசனை யுயரமுமுள்ளது. அதன்விவரம்.

சிவதருமோத்தரம் கோபுரவியல்.

"தரைக்குக்கீழ்க்கோடி தானூறுமைம்பது
தரைக்குமேற்கோடி தானூறுமைம்பது
தரைக்குண்மேருத்தடவரைத்திக்கெலா
மூரைத்ததைம்பதுறுங்கடாகத்தொடும்."

இந்தப்பூமியின்பிரமாணம் இலக்ஷம்யோசனை வர்த்துலாகாரமாய்ப் பரந்துள்ளது. இதைச்சூழ்ந்திருக்கும் இலவணசமுத்திரம் இலக்ஷம்யோசனை யகலம். அதனையடுத்துள்ள சாகத்தீவு இரண்டிலக்ஷம் யோசனை யகலம். அதையடுத்தபாற்கடல் இரண்டிலக்ஷம் யோசனை. அதையடுத்த குசைத்தீவு நாலிலக்ஷம்யோசனை. அதை யடுத்த தயிர்க்கடல் நாலிலக்ஷம்யோசனை. அதையடுத்த கிரௌஞ்சத்தீவு எட்டிலக்ஷம் யோசனை. அதையடுத்த நெய்க்கடல்எட்டிலக்ஷம்யோசனை அதையடுத்த சான்மலித்தீவு பதினாறிலக்ஷம் யோசனை அதையடுத்த கருப்பஞ்சாற்றுக் கடல் பதினாறிலக்ஷம் யோசனை. அதையடுத்த கோமேதகத்தீவு முப்பத்திரண்டு இலக்ஷம் யோசனை. அதையடுத்த மதுக்கடல் முப்பத்திரண்டிலக்ஷம் யோசனை. அதையடுத்தபுஷ்கரத்தீவு அறுபத்துநாலிலக்ஷம் யோசனை. அதையடுத்த சுத்தோதகசமுத்திரத்தைச் சூழ்ந்து சக்கரவாளகிரி விளங்கும். அது பதினாயிரம்யோசனை யகலமும் இலக்ஷம்யோசனை யுயரமுமுடையது.

மே[..]கூறிய சப்தசாகரங்களி னகலமுங்கூடி நூற்றிருபத்தேழி[...] ஆறுதீவுகளினகலமுஞ் சேர்ந்து நூற்றிருபத்

தாறிலக்ஷம்யோசனை. மேற்கூறிய சக்கரவாளகிரியை யடுத்துப் பெரும்புறக்கடல். அதன்தகலமொரு கோடியே விருபத்தேழிலக்ஷம்யோசனையாகும். அதை யடுத்திருப்பது கனகபூமி அதனகலம் பத்துக்கோடி யோசனையாம். அதையடுத்திருப்பது அந்தகாரபூமி. அதனதகலம் முப்பத்தைந்துகோடியே பத்தொன்ப திலக்ஷத்து நாற்பதினாயிரம் யோசனையாகும். அதையடுத்திருப்பதும் கடைசியாயது மண்டகடாகமாம். அதன்கனம் ஒருகோடியோசனையாகும். மேற்சொல்லியவற்றை யொருங்கே சேர்த்துப் பார்ப்பதுவே பூமியின் பிரமாணமாகும். அவற்றின் விவரம்.

| | |
|---|---|
| நடுவிலுள்ளபூமியின் அசலத்திற்பாதி | 50000 |
| சப்தசமுத்திரமும் ஆறுதீவும்சேர்ந்த அகலம், | 25300000 |
| சக்கரவாளகிரியினகலம் | 10000 |
| பெரும்புறக்கடலினகலம் | 12700000 |
| கனகபூமியினகம் | 100000000 |
| அந்தகாரபூமியினகலம் | 351940000 |
| அண்டகடாகத்தின்கனம் | 10000000 |
| ஆகமொத்தம் | 500000000 |

மேற்சொல்லிய ஐம்பதுகோடியும் மகாமேருவிற்குக் கிழக்கிலுள்ள பூமியின் பிரமாணம். இப்படியே மேற்றிசைக்கும் ஐம்பதுகோடியாகக் கிழக்குமேற்கில் நூறுகோடியோசனை. தெற்குவடக்கிலும் நூறுகோடியோசனை. இப்படியே பூமிக்குக்கீழும் மேலுமாகிய விரண்டும் சேர்ந்துநூறுகோடி யோசனை. இப்பூமியின் மத்தியகதமாய் மிகவும் உன்னதமான மகாமேருகிரிவிளங்கும். அம்மகாமேருகிரிபூமிக்குக் கீழ்ப்பதினாறாயிரம் யோசனை ஆழ்ந்தும், பூமிக்குமேலெண்பத்துநாலாயிரம் யோசனையுயர்ந்தும் விளங்கும். அதனடியின் விரிவு பதினாறாயிரம்யோசனை. முடியின் விரிவுமுப்பத்தீராயிரம் யோசனை. அம்மகாமேருவின் வடிவு தாமரைப்பொகுட்டுப் போன்றது. ஆயிரங்கொடுமுடிகளையுடையதாயிருக்கிறது. அவற்றுண் மூன்றுகொடுமுடிகளில் திரிமூர்த்திகளும் வாசஞ்செய்வார்கள். இன்னும் அஷ்டதிக்குப்பாலகர்களும் பலதேவர்களும் வசிப்பார்கள்.

இனிக்கீழுலகமேழும் அதன் பிரமாணமும் வருமாறு. கீழண்டகடாகம் கோடியோசனை கனம். காலாக்னிருத்ரபுவனங் கோடியோ

சனையகலம். காலாக்கினி யுருத்திரர் திருமேனி பதினயிரம் யோசனை அக்கினிமயம். சுவாலை பத்துக்கோடியும் புகையைந்துகோடியும் இதற்குமேலிடை வெளியொருகோடி யோசனையும் ஆகக்கூடியது. பதினேழுகோடி (17) யோசனையுயரம். நரகவுலகம் ஒன்றின்மேலொன்று யிருபத்தெட்டுக்கோடி யுள்ளன. அவற்றின் பிரமாணம் முப்பதுகோடியோசனை யுயரம். அதற்குமேற் கூர்மாண்டபுவனமொருகோடியோசனையுயரம் இதிற் கூர்மாண்டவுருத்திரரிருப்பார். அதற்குமேற் பாதாளமேழும் ஒன்றின்மேலொன்றாயிருக்கும், ஒவ்வொன்றும் பொன்மயம், இரும்புமயம், மண்மயமாக வகலத்தின் மூன்றுபாகமாக விருக்கும். ஒவ்வொரு பாகத்திலும், அசுரரொரு பக்கத்திலு மிராக்ஷதர் ஒருபக்கத்திலும், நாகராஜா, நாககன்னிகை யொருபக்கத்திலுமாக விருப்பார்கள். தவிர அசுரப்பிரமுகாளாயுள்ள மாவலி, பிரகலாதர், முதலியவசுரர்களு மிருப்பார்கள்.

## பாதாளங்களின்விவரம்.

1. பாதலம் 2. அபாதலம் 3. பத்மதலம் 4. நிதலம் 5. சுதலம் 6. மாதலம் 7. இரசாதலம். இப்பாதளங்களேழினுயரமும் ஒருகோடி யோசனைஉயரம். அதற்குமேற் பூமியின் கனமொருகோடி யோசனையாகப் பூமிமுதற் கீழண்டகடாகம் வரையிலுள்ள கீழுலகத்தின் பிரமாணம் ஐம்பதுகோடி யோசனையுயரம். மேற்கூறிய கீழுலகத்திற்குச்செல்லும் பிலத்துவாரமாயிரம் யோசனை யகலமுடையது. இப்பாதாள உலகத்தின் கீழ் ஆதிசேஷனிருக்கின்றது.

## இனிமேலுலகங்களேழின்பிரமாணமாவது.

புவலோகம் பதினைந்திலக்ஷம் யோசனை. சுவர்க்கலோகம் எண்பத்தைந்து இலக்ஷம் யோசனை. மேலிரண்டுமொன்று.

2. மகலோகமிரண்டுகோடியோசனை.
3. ஜெனலோகமெட்டுக்கோடியோசனை.
4. தவலோகம்பன்னிரண்டுகோடியோசனை.
5. சத்தியலோகம்பதினறுகோடியோசனை.
6. விஷ்ணுலோகம் நாலுகோடியோசனை.
7. சிவலோகமாறுகோடியோசனை.

ஈற்றில் அண்டகடாகம் ஒருகோடியோசனை கனம். ஆகமேலுலகங்களின் பிரமாணமைம்பதுகோடி யோசனையுயரமாகும். இப்படி

இந்தப்பிருதிவி பூத அண்டம் நூறுகோடியோசனை அகலமும்,நூறு கோடியோசனை யுயரமும்உள்ளது. இதுவே பிருதிவிபூதஅண்டமாம். இப்பிருதிவி பூத்அண்டத்திலாயிரங்கோடி அண்டங்களுள்ளன. தத்துவங்கள் பிருதிவிதத்துவமுதல் நாத தத்துவமீருக முப்பத்தாறு தத்துவங்களாம். ஒவ்வொரு தத்துவத்திற்கும் ஆயிரக்கோடி அண்டங்களாக முப்பத்தாருயிரங்கோடி யண்டங்கள் இருக்கின்றன. இந்தப்பிருதிவி பூத அண்டம் எப்படி நூறுகோடியோசனை யகலமும், நூறுகோடியோசனை யுயரமுமுள்ளதோ அப்படிப்போலவே அப்பு பூதஅண்டமும் இப்பிருதிவிபூத அண்டத்திற்குப் பத்துப்பங்கு அதிகமான ஆயிரங்கோடி யோசனையகலமுமுயரமுமுள்ளது. இப்படிப் போலவே மற்றத்தத்துவங்களுக்கும் முறையே ஒன்றுக்கொன்று பத்துப்பங்கு பத்துப்பங்கு அதிகமான வகலமு முயரமுமுடைத்தாய் முப்பத்தாருயிரங்கோடி அண்டங்களிருக்கின்றன. இவ்வண்டங்களுக்குள்ளிருப்பனயாவும், சர்வைஸ்வரியமெனப்பெயர்பெறும் இந்தச்சர்வைஸ்வரியத்தையு முடையவரே பரமேஸ்வரர். மேற்கூறியவண்டகோடிகளனைத்தும் மாயையின்காரியமாம். இவ்வனைத்திலுக்கும் காரணமான மாயையைக் காரியப்படுத்துவானும் மீண்டு அவைகளைக் காரணத்திலொடுக்குவானும் பரமேஸ்வரன்.

இந்த அண்டகோடிகளுக்குள் வசிக்கும் சர அசர ஜீவர்கள் ஒருவித எண்ணிக்கையினுலேயும் எண்ணமுடியாதன. ஜீவராசிகளனைத்தும் மோட்சமடைகிற பரியந்தம் யாருடைய பொருளைக்கொண்டு ஜீவிக்கிருர்கள் என்ருல் பரமசிவனது பொருளைக்கொண்டேஜீவிக்கிருர்கள். அஃதெவ்விதமெனில்பின்வருமாறுணர்த்துவாம் ஜீவகோடிகள் அனுதியில் ஆணவமலவிருளினின்றும் பரமசிவனது கருணையால் வெளிப்பட்ட காலமுதலின்றுவரையிலும் இனிச்சீவத்துவம் விடுபட்டு மோட்சமடைகிற பரியந்தம் சர. அசர. பேதமான இவ்வான்மாக்கள் பரமசிவனுல் கொடுக்கப்பெற்ற தனுகரண புவனபோகங்கள் (அதாவது முறையேசரீரம், இந்திரியம் அந்தக்கரணம், வசிக்குமிடம், சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமுதலிய பஞ்ச விஷயங்களும்) சீவர்களதுடைமையா? அல்லது வேருெருவருடைமையா? வேருெருவரால் கொடுக்கப்பட்டதா? என்று விசாரிக்கு மிடத்து மேற்சொன்னவைகளனைத்தும் ஒருவருக்குச் சொந்தமானதென்ருவது ஒருவரால் கொடுக்கப்பட்டதென்ருவது ஏற்படவில்லை; இதனுல்யாவும் பரமசிவனுடைய பொருளேயன்றி வேருெருவற்குரித்தல்லவென்றும் முழுமையும் அவராலேயே கொடுக்கப்பட்டதென்

றும் தெளிவாய் விளங்குகின்றமையால் அவரே தலைவள்ளலும் மகா ப்பிரபுவுமாகும்.

ஒருநன்றிசெய்தாரை எப்போதுமறவாது சிந்திக்கவேண்டிய திருக்க, அளவிறந்த நன்றியைச் சர்வதா செய்கின்ற பரமேஸ்வரனைச் சிந்தியாமலும் அவராற் கட்டளையிடப்பட்ட சுருதிவாக்கியப் படிசெய்யாமலும் அதற்குமாறாக விருக்கின்ற பலசெய்கைகளைச் செய்தல் பெருங்குற்றமாகுமன்றோ? இது எல்லாருடைய அனுபவமேசொல்லும். இனியாகிலுஞ் சுருதிக்குமாறாகிய செய்கைகளைச் செய்யாமலும் சுருதியின் விதிப்படி செய்துவருவோமாகில் முன் செய்த குற்றத்தை மன்னித்து இரட்சிப்பார். அவரோ பரமதயாளு. அநாதிகாலத்தில் ஆணவமல இருளிலிருந்த சீவகோடிகள் தம்மையும் தம்மைமறைத்த இருளையுந் தெரியாது கட்டைபோலத் தமக்கு வேண்டுவதின்னதென்று நினையாமலுமிருக்கத், தனது காருணியத்தால் அதினின்றும் வெளிப்படுத்தித் தனது மாயையைக் காரியப்படுத்தித் தனுகரணபுவனபோகங்களைக் கொடுத்து முன்னர் விஷயஞானத்தை விளக்கிப் பின்னர் சுருதி குரு சுவானுபவங்களால் சிவஞானத்தைக்கொடுத்து மோட்சத்தையுங் கொடுக்கின்றவர் பரமேஸ்வரர் அவரே பரம காருணியர்.

## வைராக்கியசதகம்.

"வீடுகூட்டுவான்குறித்ததினிமித்தமாய்விமலனீ தலினம்மாற்
கூடுமாயையையெனதியானெனவெணிக்கொள்வதென்பயமாசை
நாடுபோழ்திவைசுழுத்தியிற்புரந்தவனெவனவனனவாதி
யூடுமூழ்வழிபுரப்பனென்றுள்ளமேவுடல்நைவிட்டிருப்பாயே."

---

நமக்கு ஒருங்கே இடம்பொருளேவல் மூன்றையு மளித்தவர் பரமேஸ்வரர். அதாவது ஜீவன் வசிப்பதற்குச் சரீரமாகிய இடமும், ஏவல்செய்வதற்கு இந்திரியங்களும் புசிப்பதற்குப் பொருளாகிய பஞ்சவிஷயங்களையும் கொடுத்திருக்க அப்பெரும் நன்றியை இதுகாறும் மறந்ததற்கு அவரை யிரந்துகேட்டுக் கொள்வது எவ்விதமென்றால்,

## பிரபுலிங்கலீலை வசவண்ணர்வந்தகதி.

"என்குணமறமேயாகில்யானதிற்றிரிதலில்லேன்
நின்குணமருளேயென்றுனீயதினிற்றியெந்தாய்

புன்குணமகவின்றீமைபொறுத்தருள்செய்கையென்னுந்
தன்குணம்விடுத்தொழிக்குந்தாய்வியனுலகிலுண்டோ.

நிலமகள்பொறுது தள்ளினிருத்துநர்யாவரோதை
மலிகடல்புரளுமாயின்மறிப்பவருளரோவெங்க
டலைவநீமுனிவையாயிற்றடுப்பவருலகில்யாண்டு
மிலையிலையருள்செயெந்தாயெனச்சென்னவசவன்றாழ்ந்தான்.”

ஈஸ்வரப்பிரபுத்துவம் முற்றும்.

---

உ

சிவமயம்.

# பதிபுண்ணியம்.

"ஒருகோட்டனிருசெவியன்மும்மதத்தனால்வாயையங்
கரத்தனாறு
தருகோட்டம்பிறையிதழித்தாழ்சடையான்றருமொருவா
ரணத்தின்றாள்கள்
உருகோட்டன்பொடும்வணங்கியோவாதேயிரவுபக
லுணர்வோர்சிந்தைத்
திருகோட்டுமயன்றிருமால்செல்வமுமொன்றோவென்னச்
செய்யுந்தேவே."

"தெய்வஞ் சிவனே சிவனருள் சமயஞ், சைவஞ் சிவத்தொடு சம்பந்தமென்றான், சைவம்வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி" சைவரென்றால், சிவசம்பந்திகள், அதாவது பரமசிவமே எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள் சகலகர்மதர்மங்களுக்கும் பலதாதா, அவருக்கு உயர்ந்தாரும் ஒப்பாரும் இல்லையென்ச் சத்திய புத்தியுடன் வழிபடுகின்றவர்களே சைவர்கள்.

அசைவர்கள் லக்ஷணம் யாதென்றால் சிவாகமம் சிவஞானபோதமுதலிய பதினான்கு சாஸ்திரம் சமயாசாரியர் வாக்கியமாகிய தமிழ்வேத தேவாரதிருவாசகம் சேக்கிழார்சுவாமிகள் வாக்கியமாகிய பெரியபுராணமுதலிய சிவபுராணங்களை விசாரம் செய்துணராது வேறுவேறுபலநூல்களை பலவாகச்சதர்காலமும் விசாரித்துப் பல தேவர்களுடனே, பரமசிவமும் ஒருதேவனென்றேகருதி, விபூதி ருத்திராக்ஷபஞ்சாக்ஷர சிவபூசையுள்ளவர்களெல்லாம் அசைவராகும். ஒவ்வொரு சமயிகளுக்கும் விதியும் விலக்கும் வேறுவேறாக இருக்கும். ஒருசமயிக்கு விதித்தவிதி மற்றொருசமயிக்கு விலக்காக இருக்கும்; ஆகையால் சைவர்க ளனுஷ்டிக்கவேண்டியவைகளை ஆகம விதிப்படி அனுட்டிக்கின்ற சைவர்களினிடமாகவே விசாரித்து அவ்விதமனுஷ்டிக்கவேண்டுமே தவிரச் சிவாகமம், சிவசாஸ்திரம், சிவபுராணங்களை வாசித்தும் அதிற்சொல்லியபடி அனுஷ்டிப்பில்லாமல் வேறுவிதியை அனுஷ்டிப்புள்ளவர்கள் மூலமாக விசாரித்து அனுஷ்

டிக்கும் சைவர்கள் நன்மையுமிழந்து விபரீதத்தையுமடைவார்கள். தேவேந்திரன் துவட்டாபுத்திரன் விச்சுவவுருவனைத் துணையாகக் கொண்டு யாகம்செய்ய நன்மையுமிழந்து பிர்மஹத்தியுமடைந்தார்; இது திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்தபடலத்தில்காண்க. சைவ வேடம்பூண்டு தாங்கள் சைவரென்றே கருதி அதற்குரிய செய்கைகளைக் கைவிட்டுத் தாங்கள்சேர்ந்த வண்ணமே ஆகின்றார்கள் எதுபோலவெனின்,

## திருக்குறள்.

*"நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகு மறிவு."*

சைவர்களுக்கு விதியாதென்றால் விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷர சிவதீக்ஷாயுக்தர்களுக்கே சகலதானதர்மங்களும் செய்யவேண்டுமென்பது. அப்படியிருக்க அதை முற்றும் கைவிட்டார்கள். மற்ற வைஷ்ணவர்கள், மாத்வர்கள், ஸ்மார்த்தர்கள் முதலிய சமயத்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் சமயத்தவர்க்கே தானதர்மங்கள் செய்கிறார்களே அதைப்பார்த்தாகிலும் தெரியக்கூடாதா. வீரசைவர்கள், சைவர்கள், ஸ்மார்த்தர்கள், வைஷ்ணவர்கள், மாத்வர்களுக்கெல்லாம் பொதுநூலாகிய வேதபாடசாலைகள் ஏற்படுத்தியவர்கள் சைவர்களாகவே இருந்தும் சைவர்களுக்குரிய விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷரம் சிவபூசை சிவாலய தரிசனம் நித்திய நைமித்திகங்களும் சிவத்துவிஜாளுக்குரிய சிவாலயபூஜை நித்தியநைமித்தியங்களையும் பதிபுண்ணியங்கூறும் பரமசிவவாக்கியமான சிவாகமபாடசாலை,(க) பரமசிவமே முழுமுதற்கடவுளெனக்கூறும் சிவஞானபோதமுதலிய பதினன்கு சாஸ்திரபாடசாலை, (உ) சுவயம்புக்ஷேத்திரம் ஈதென்றறிவிக்கும் சாஸனமான தமிழ்வேத தேவார திருவாசகபாடசாலை,(ஙு) இம்மூன்றும் சைவர்களுக்கே உரியனவாகவும் அவற்றைக் கைவிட்டது, இஃது அனுவசியமென்றோ, புண்ணியமில்லையென்றோ, நல்லோர்கள் உபதேசமோ அறிகிலோம். பலவாக அன்னசத்திரங்கள் யேற்படுத்தியவர்களெல்லாம் விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷரத்துக்குரிய சைவர்களாகவே இருந்தும் இம்மூன்றுக்குரிய ஆதிசைவர்கள் பிராமணர்களில் மகாசைவர், சற்சைவர்கள் இவர்களுக்குப் பரமசிவ நிவேதனம்செய்து புசிக்கும்படி புனிதமான அன்னம் ஒருசத்திரங்களிலும் ஏற்படுத்தவில்லை. போசனம்செய்த பிறகு சேவ... னம் ஏற்பட்டிருக்கிறதேயென்றால் புசிப்பவர்களுக்குக் கூ... சிவநிவேதனம் செய்து புசிப்பவர்களுக்குக் கூடுமா? இ...

சைவர்களே அறிவார்கள். குருபூசைமடத்தில் எவ்விதம் நடத்துகிருர்கள்? மகேஸ்வர பூசைசெய்யும் கிரஹத்தில் எவ்விதம் நடத்துகிருர்கள்? சிரார்த்தம்செய்யும் கிரஹத்தில் எவ்விதம் நடத்துகிருர்கள்?இஃது அபிஷேகஸ்தர்களாகிய ஆசாரியபுருஷர்களுக்குமாத்திரமல்ல;சிவதீக்ஷைசிவபூசையுள்ளசற்சைவர்களுக்கெல்லாம்பரமசிவநிவேதனம்செய்தே புசிக்கவிதியேற்பட்டிருக்கிறது.அறுபத்துமூன்று நாயன்மார்களும் சிவவேடம் பூண்ட சிவனடியார்களுக்கே அன்னம் இட்டும் அவர்கள் வேண்டியவைகளைக் கொடுத்தும் அவர்களுக்குரிய பணியைச்செய்தும் மேலான பதவியை அடைந்தார்களென்பது உணர்ந்தும் அதை மறந்தது, கரும்புகசந்துவேம்பு இனித்ததுபோல ஆகும். பதிபுண்ணியங்களில் சிவாலயத் திருப்பணி, கும்பாபிஷேகம், அதிகம். அதிலும் சர்வசிரேஷ்டம் காலங்களில் நித்திய நைமித்திக மந்திரங்கிரியை பாவனைகள் ஒத்துத் திரிகரண சுத்தியாய்ச்சிரத்தாபத்தியுடன் பூசைசெய்வது மூர்த்திகரம்விளங்கச்செய்வதென்றறிந்தும், அவைகளைச்செய்யாது ஆலயங்களை விஸ்தாரமாகத் திருப்பணிசெய்தும் கும்பாபிஷேகத்தை அலங்காரமாக நடத்தியும் பின்பு கைவிடுகிருர்கள். பெரிய ஆலயங்களில் மூர்த்திகரம் பூரணமாய் விளங்குமென்பதும், சிறிய ஆலயங்களிற் குறைவாக விளங்குமென்பதும் உண்டோ? சிவாலயபூசைசெய்யும் ஆதிசைவர்களுக்கு ஆலயவரும்படி அற்பமாக இருப்பதினுல் அவர்கள் குடும்பத்திற்கு அன்னவஸ்திரம் உபநயனம் கல்யாணம் ஆசாரியாபிஷேகம் முதலானவைகளுக்குப் போதாமையால் கிரஹங்கள் தோறும் ஊர்ஊர்கள்தோறும் திரிந்து ஜீவிப்பதினுல் விதிவிலக்குகளைக் கூறும் பரமசிவவாக்கியமான வேதாகமங்களை வாசிக்கக்கூடாமலும் பூஜாகாலங்களில் மனமொன்று வாக்கொன்று செய்கையொன்ருகப் பூசிக்கிருர்கள். என்செய்வார்கள்! ஆதிசைவர்களை வாசிக்கவைத்தால் வாசிப்பதில்லை எனச் சிலர் சொல்லுகிருர்கள். அது சரியல்ல. குடும்பபாரம் தலைக்கொண்டு கிலேசமுற்றவர்கள் என்செய்வார்கள்? சிவாலயங்களில் விதிப்படி நித்தியநைமித்தியங்கள் நடவாமையினுல் உலகத்தில் பலவாருகத் தீங்குகள் வந்து சம்பவிக்கின்றன.

## திருமந்திரம்.

"ஆற்றரும் நோய்மிகும் அவனிமழை குன்றும்
[illegible]ரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
[illegible]ற்ற[illegible]ான்திருக் கோயில்கடோறும்
[illegible]ற்றுதைத் [illegible]டிற் ருனே."
[illegible]சாற்றிய பூசனை தப்ப[illegible]

இவ்வான்றோர் வாக்கியப்படி மிகுதியான தீராநோய்களும்பல பலபுதியநோய்களும் அடிக்கடிப் பெருங்காற்றுப்புயல்களும்மிகுந்த வெள்ளமும் சனச்சேதங்களும் பஞ்சம்முதலிய பலதீங்குகளும் சம்ப வித்ததை அனுபவத்தில் அறியலாமே.

இப்பத்திரிகையின் அபிப்பிராயம் என்னவென்றால் சைவர்கள் அவசியம் செய்யவேண்டியதாவது (க) சிவாகமபாடசாலை (உ) சிவ ஞானபோதமுதலிய பதினான்கு சாஸ்திரபாடசாலை (ஙூ) தமிழ்வேத மாகிய தேவார திருவாசக பாடசாலை (ச) சிவாலயபூசைசெய்யும் ஆதிசைவர்களுக்கு அன்னவஸ்திராதிகளுக்குக் குறைவில்லாமல் நட த்திச் சிவாலயத்தில் மூர்த்திகரம் விளங்கச்செய்வது. (ரு) அன்ன சத்திரங்களில் சைவர்களுக்குப் பரமசிவ நிவேதனம் செய்து புசிக் கச்செய்வது. இந்த ஐந்தும் செய்யவேண்டியது அவசியம். இன் னும் நல்லோர் பெரியோர்களை விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

இப்படி சைவலக்ஷணம் நாயகநாயகிபாவமாக இருக்க அதின் ஒழுங்கைக்கைவிட்டு உலகில் சாமான்னிய புருஷனை நாயகனாக அடை ந்தநாயகி அவனுக்குயர்வு மொப்புமில்லையெனத்தெய்வமாக அவனை வழிபடுதல்போலாது உலகில் அநேககுடிகளையும் படைகளையு மொ ருங்கேயாளும் நாயகனாகிய அரசனை நாயகனாக அடைந்தநாயகி அவ் வரசனைச் சாமானியனாக மதித்துத் தன்நாயகனல்லாத இழிந்த ஒரு வனை வுயர்வாகமதித்துக் கொண்டாடுபவள்போலச் சைவசின்னந் தரித்தும் சைவரென்றபேர்மாத்திரம் வகித்து அதின் உண்மையறி யாது ஒழுகுஞ் சைவர்களும் உளர்.

பதிபுண்ணியம் முற்றும்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநம:

# சிவாராதனம்.

"சத்தியாய்ச்சிவமாகித்தனிப்பர
முத்தியானமுதலைத்துதிசெய்ச்
சுத்தியாகியசொற்பொருணல்குவ
சித்தியானைதன்செய்யபொற்பாதமே"

பரமசிவன் அடியார்கள் அன்பைச் சோதனை செய்து பின்பு அவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்வாரென்று பலருஞ்சொல்வார்கள். அது குற்றமாகும்; ஏனெனில், எல்லாவற்றையும் இருந்தபடியே அறியும் சர்வஞ்ஞத்துவத்திற்குக் குறைவாகுமாதலானும், பரிசோதனை செய்யப்புகுந்தாரென்றால் அதற்குமுன் அவர்கள் அன்பை அவர் அறிந்து கொள்ளவில்லை யென்று பெறப்படுதலானும் என்க. பின்னை எப்படி என்றால், பூர்வமேதாம் அறிந்த அவர்கள் அன்பின் மிகுதியை உலகில் எல்லாரும் அறிந்து உய்யும் பொருட்டு அதனை வெளிப்படுத்துவதற்கு இறைவன் செய்யும் திருவிளையாடலாம். இதற்குப்பிரமாணம் வருமாறு:—

திருவிளையாடல், இரசவாதஞ்செய்தபடலம்.

"மாதரின்னெறிவழங்குநாண்மற்றவளன்பைப்
பூதலத்திடைத்தெருட்டுவான்பொன்மலைவல்லி
காதனாயகன்றிருவுருக்காணியவுள்ளத்
தாதரங்கொடுத்தருளினார்பூவணத்தையர்"

தி[illegible]விளையாடல், பலகையிட்டபடலம்.

"இன்னிசையா[illegible]ம்பாணனெவ்விடையூறடுத்தாலுந்
தன்னியமநெறியொழுக[illegible]னென்பதுலகசறியப்

பொன்னியலுஞ்சடைமௌலிப்புராணர்திருவிளையாட்டா
லன்னிலையிற்கருங்கொண்மூவார்த்தெழுந்ததிசையெல்லாம்"

கண்ணப்பநாயனர்புராணம். (க)

"உனக்கவன்றன்செயல்காட்டநாளைநீயொளித்திருந்தா
லெனக்கவன்றன்பரிவிருக்கும்பரிசெல்லாங்காண்கின்றாய்
மனக்கவலையொழிகென்றுமறைமுனிவற்கருள்செய்து
புனற்சடிலத்திருமுடியாரெழுந்தருளிப்போயினர்"

(கசுஉ)

"அண்ணலார்திருக்காளத்தியடிகளார்முனிவனுற்குத்
திண்ணனார்பரிவுகாட்டத்திருநயனத்திலொன்று
துண்ணெனவுதிரம்பாயவிருந்தனர்தூரத்தெய்வ
வண்ணவெஞ்சிலைக்கைவேடர்வல்விரைந்தோடிவந்தார்."

சிவாராதனஞ் செய்யாவிடில் நன்மையுமிழந்து தீமைக்கும் உள்ளாவார்.

தேவாரம்.

"ஆரட்டதேனுமிரந்துண்டகமகவன்றிரிந்து
வேரட்டநிற்பித்திடுகின்றதால்விரிநீர்ப்பரவைச்
சூரட்டவேலவன்றாதையைச்சூழ்வயலாரதிகை
வீரட்டத்தானைவிரும்பாவரும்பவவேதனையே"

பட்டினத்தடிகள்.

"ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப்
போற்றாதவர்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பவரே."

அபிராமியந்தாதி.

"தோத்திரஞ்செய்துதொழுதமின்போலுநின்றோற்றமொரு
மாத்திரைப்போதுமனதில்வையாதவர்வண்மைகுலங்
கோத்திரங்கல்விகுணங்குன்றிநாளுங்குடிகடொறும்
பாத்திரங்கொண்டுபலிக்குழலாநிற்பர்பாரெங்குமே."

தேவாரம்.

"நன்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத்திருக்காளக்கோயிலான்

றன்கடன்னடியேனையுந்தாங்குத
லென்கடன்பணிசெய்துகிடப்பதே."

சிவாராதனமாவது மனம் வாக்குக்காயமாகிய இம்மூன்றினாலும் இவற்றின் வேறாகிய பொருளினாலும் சிவபெருமானை வழிபடுதல்.

அவற்றுள், மனத்தினால் ஆராதித்தல் மனம் பேரன்போடு உருகிச் சிவபெருமான் சரணாரவிந்தங்களைத்தியானித்து அதன் கண் அழுந்துதல்.

வாக்கினாலாராதித்தல் தமிழ் வேதமாகிய தேவாரதிருவாசகங்களை நெஞ்சம் நெக்குருக ஓதுதலும், அவற்றால் தோத்திரஞ்செய்தலும், சிவநாமங்களை உச்சரித்தலும் பஞ்சாட்சரவுருவேற்றலுமாம்.

காயத்தினால் ஆராதித்தல் விபூதி உருத்திராக்கந்தரித்தலும் சிவசரிதங்களை விசாரித்தலும் சிவாலயப்பிரதக்ஷணஞ் செய்தலும் சிவாலய தரிசனஞ்செய்தலும் நமஸ்கரித்தலும் பிறவுமாம்.

பொருளினாலாராதித்தல் அபிஷேகதிரவியம் சுகந்தம் விரைத்தூபம் தீபங்கள் சேகரித்தலும் மனோரம்மியமானவும் கண்ணுக்கு இனியவானவும் திவ்வியதேஜஸ் உடையனவுமாகியஉயர்ந்தவஸ்துக்களை நிவேதனஞ்செய்தலாம். பரமசிவார்ப் பணஞ் செய்யும் வஸ்துக்கள் எல்லாவற்றினும் உயர்ந்தனவாகவும் திவ்வியமுடையனவுமாக இருத்தல் வேண்டும். அப்படிக்கன்றிச் சாமானிய வஸ்துக்களை அர்ப்பணம் பண்ணினால் தனக்குப் பாபம் லபிப்பதன்றித்தன் மாதாபிதா சகோதரர் ஸ்திரீ புத்திரர்களுக்கும் பாபம் சம்பவித்து அவர்களைப் பெருந்துன்பத்திற்குள்ளாக்கும். எதுபோலவெனின், ஒருவன் நல்ல பயனையடைய விரும்பினால் நற்குணங்களையே செய்யவேண்டும், ஒருவன் மா, பலா, விளா முதலிய நல்ல மரங்களை வைப்பானானால் நல்ல பழங்களை யனுபவிப்பான். அதுபோலப் பரமசிவார்ப்பணஞ் செய்யும்வஸ்துக்கள் நல்லவஸ்துக்களாயின் நன்மையைப்பெறுவான் அற்பவஸ்துக்களாயின் தீமையையடைவான்.

சிவாராதனஞ் செய்து அவரிடத்திலன்புவைத் தொழுகுதல் எதன் பொருட்டு என்றால் நாம் அவரிடத்திலடையும் பயன் கருதியே. எதுபோலவெனின், தாய்தந்தை சகோதரர் ஸ்திரீ புத்திரர் மித்திரர் முதலியோரிடத்தில் நாம் அன்புவைத்தல் அவர்களால் நாம் பெறும் பயன் குறித்தன்றோ? நம்மிடத்தில் அவர்கள் அன்பு வைத்தல் நம்மால் அவர்களடையும் பயன் குறித்தன்றோ? அது போலச் சிவபெருமானிடத்து நாம் பெறும் பயன் யாதென்றால், சனன மரண வேதனை நீங்கப்பெறுதலும் மோக்ஷ இன்பம் பெற்றிருத்தலுமாம்.

## தாயுமானசுவாமி.

"வஞ்சகமன்வாதனைக்கும்வன்பிறவிவேதனைக்கும்
அஞ்சியுனையடைந்தேனையாபராபரமே."

இவ்வாறு சொல்லிய நான்குவகைத் துன்பத்தில் துடக்குண்டு நிவர்த்தித்துக்கொள்ள முடியாமற்கிடந்து தவிக்கும் தாய் தந்தை முதலியவர்களிடத்தில் நாம் வைக்கும் அன்பைப்பார்க்கிலும் எத்தனையோமடங்கதிகமான அன்பைச் சிவபெருமான் திருவடிகளில் வைத்தல்வேண்டும்.

## உபதேசகாண்டம்.

"வாசப்பூதியுருத்திரமாமணி
பூசிப்பூண்ல்குரவனைப்பேணுதல்
ஆசைப்பாட்டினரனைப்புகழுதல்
ஈசற்குள்ளனநாமமியம்புதல்"

இங்ஙனம் நாம் சிவபெருமானிடத்தில் பெறும் பயன் கருதிச் சிவாராதனஞ்செய்வதுபோலச் சிவபெருமான் நம்மிடத்தில் பெறும் பயன் உண்டோ? என்றால், ஒரு காலத்துமில்லை. பரமசிவன் தானொருபயனுங்கருதாது சீவர்களுடைய சனனமரண துன்பங்களை நிவர்த்தித்துப்பேரானந்தப் பெருங்கடலாகிய மோக்ஷத்தை அளித்துக் கருணையே வடிவமாகக்கொண்டு நிர்மய நிர்விகாரப்பஞ்ச கிருத்திய கருத்தாவாய்ச் சீவாத்மாக்களை இரட்சிக்கும் பரமகிருபாளுவாமென்க.

## பட்டினத்தடிகள்.

பொன்னாற்ப்ரயோசனம்பொன்படைத்தாற்குண்டுபொன் படைத்தோன்
றன்னாற்ப்ரயோசனம்பொன்னுக்கங்கேதுண்டத்தன்மையைப்போ
லுன்னாற்ப்ரயோசனம்வேணதெல்லாமுண்டுனைப்பணியு
மென்னாற்ப்ரயோசனமேதுண்டுகொளத்தியீசுரனே.

## மத்தியார்ச்சுனபுராணம்.

அளகபாரமுமணிதனபாரமுமிடையுங்
களபவண்டலுங்கண்ணிணைவண்டையுங்காணு
னிளகுநெஞ்சினெம்பிராற்கிவடகுமெனவெண்ணிப்
புளகிதஞ்செயாமனைவியைக்கொடுபுறப்பட்டான். (க)

கோயிலிற்புகுந்திடைமருதீசனைக்கூவ
வாயிலைத்திறந்திறைவனும்வருகுணவென்றான்

றுயினுநல்லசங்கராவுனக்கிவட்குமென்
னுயினுய்குவேனல்லதுய்யேனெனவறைந்தான். (உ)

திருவிளையாடற்புராணம்.

வைகலுமவித்தசெவ்விப்பிட்டினைமருங்குநான்கு
கைகளாய்மூளைத்தமுக்கட்கரும்பினையரும்புமூரற்
செய்கதிர்முகத்தானந்தத்தேறலையாலவாயெம்
மையனையகத்தானேக்கியன்பினுலருத்துவிப்பாள்.

கண்ணப்பநாயனூர்புராணம்.

போதுவர்மீண்டுசெல்வர்புல்லுவர்மீளப்போவர்
காதலினேக்கிநிற்பர்கன்றகல்புனிற்றுப்போல்வர்
நாதனேயமுதுசெய்யநல்லமெல்லிறைச்சிநானே
கோதறத்தெரிந்துவேறுகொண்டிங்குவருவேனென்றூர். (ககஉ)

கொழுவியதசைகளெல்லாங்கோலினிற்றெரிந்துகோத்தங்
கழலுறுபதத்திற்காய்ச்சிப்பல்லினுலதுக்கிநாவிற்
பழகியவினிமைபார்த்துப்படைத்தவிவ்விறைச்சிசால
வழகிதுநாயனீரேயமுதுசெய்தருளுமென்றூர். (கஉரு)

இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலம்.

வழுதியரியணையிலிருந்தடியிற வீழ்பழுமரம்போன் மணன்மேல் யாக்கை, பழுதுறவீழ்ந்துயிரொடுங்க வறிவொடுங்கிமட்பாவைபடிந் தாங்கொல்லைப், பொழுதுகிடந்தறிவுசிறிதியங்கவெழுந்தஞ்சலிக் கைப்போதுகூப்பி, யழுதிருகண்ணீர்வெள்ளத்தாழ்ந்தடியேனென் பிழைத்தேனண்ணலண்ணல்.

இவ்வாறு சிறுத்தொண்டனாப்புத்திரனுலும், இயற்பகை நாய னூர் வரகுணதேவனா மனைவியாலும், கண்ணப்பனாச்சரீரத்தினு லும், அதிபத்தனாப் பொருளாலும், சண்டீசனாப் பிதாவினுலும், பிட்டு வாணிச்சியைப் பிட்டினுலும் ஆட்கொண்டு அவர்க்கு அனுக் கிரகஞ்செய்தருளினூர் சிவபெருமானூர்.

இனி, அன்பர்களெல்லாரும் அடியார்களைப் பரமசிவமாகப்பா வித்து அன்பு செய்தபடியினுலன்றே, சிவபெருமானும் அவ்வடிய வர் வேடத்தைத்தாமும் தரித்துக்கொண்டு எழுந்தருளி ஆங்காங்கு அவ்வடியவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்தார். அப்படியாயின், சிவ வேடம் அவ்வளவு அவசியமோவென்றூல் அவசியந்தான். எதுபோல

வெனின், நாயகியுடன் கலந்து இன்பம் அனுபவிக்க நாயகியும் நாயகனுமேபோதாது; திவ்விய வஸ்திரம் அலங்கார ஆபரணம் கஸ்தூரி சந்தனம் புழுகு புஷ்பமுதலிய காமரசமிகுவிக்கும் இன்பவஸ்துக்களும் உடனிருக்கவேண்டும்; தானதருமங்கள் செய்யுங்காலத்தும் விபூதி உருத்திராக்கந்தரித்திருத்தல் வேண்டும் - தம்மிடத்தில் தானதருமம் பெற்றுக்கொள்பவர்களுக்கும் விபூதி உருத்திராக்கந்தரிப்பித்தல் வேண்டும். இங்ஙனஞ்சிவவேடப்பொலி வில்லாதவர்கள்செய்யுந்தானதருமங்கள் மக்கிப்போன வித்துக்களைப்போலப்பயனின்றியொழியும் - சிவவேடம் இல்லாதார்க்குச் செய்யுந்தானதருமங்கள் உவர் நிலத்தில் விதைத்த விதைபோல வீணாகும் - அதுவன்றியும், ஈசசம்பந்தமான விபூதி உருத்திராக்கதாரணமில்லாதவர் நீசராகும்; சிவசம்பந்தமில்லாத சரீரம் சவமாகும்.

இனி, சிவாராதனஞ் செய்யாவிட்டால் தோஷமுண்டோவென்றால் மிகவும் தோஷமுண்டு - ஏனெனில், பரமசிவனால் அனுக்கிரகிக்கப் பெற்றதனுகரண புவனபோகங்களைக்கொண்டு தம்மறிவு விளங்கப்பெறுதலால் ஆன்மாக்களெல்லாம் அவற்றை அருளிய பெருமானைக்குறித்து வழிபடுதல் அவசியமாம். அங்ஙனம் வழிபடாவிடில் நன்றிமறந்தகுற்றமுண்டாகும்.

இனி, ஒரு பக்கத்தார் நாம் ஒரு தீமையுஞ்செய்யவில்லை, நன்மையுஞ்செய்யவில்லை யென்பார்கள். ஆனால், நன்மையோ செய்தால் மாத்திரந்தான் வரும், தீமையோ செய்யாமலிருந்தாலும்வரும். அது எதுபோலவெனின், சரீரத்திற்குச் சௌக்கியம் செய்தால் சௌக்கியமாயிருக்கும்; சௌக்கியம் செய்யாவிட்டால் அசௌக்கியம் உண்டாகும். ஆகவே, நன்மை செய்யாவிடில் அவசியம் தீமையே வரும்.

### தாயுமான சுவாமிகள்.

திருந்துசீரடித்தாமரைக்கன்புதான்செய்யப்
பொருந்துநாணல்லபுண்ணியஞ்செய்யுநாள்பொருந்தா
திருந்தநாள்வெகுதீவினையிழைத்தநாளென்றா
லருந்தவாவுனைப்பொருந்துநாளெந்நாளடிமை.

### திருவாசகம்.

சிந்தைசெய்கைகேள்விவாக்குச்சீரிலைம்புலன்களான்
முந்தையானகாலநின்னையெய்திடாதமூர்க்கனேன்
வெந்தையாவிழுந்திலேனெனுள்ளம்வெள்கிவிண்டிலே
னெந்தையாயநின்னைஇன்னமெய்தலுற்றிருப்பனே.

நன்மையென்பது சீவர்களை இரட்சிக்கும் பரமசிவாராதனையே யாகும் - சிவாராதனையைச்செய்யாது விடுதலே தீமையாகும்.

சிவபெருமான் பிறப்பிறப்பில்லாதவனும் சீவான்மாவுக்குள் அந்தரான்மாவாயிருப்பவனும் தேவர்கட்செல்லாம் தேவனும் சீவர்கட்கெல்லாம் தலைவனும் மங்களகரமுடையவனும் ஐஸ்வரியங்களையெல்லாம் உடையவனும் என்பது அவனுக்கு வழங்கும் 'பிறப்பிறப்பிலி' 'ஆத்மநாதன்' 'தேவதேவன்' 'மகாதேவன்' 'பசுபதி' 'சங்கரன்' 'சிவன்' 'ஈஸ்வரன்' முதலிய திருநாமங்களினாலேயே அறியக்கிடத்தலால் அத்தகைய இறைவனை வழிபடாதிருத்தல் பெருந்தீமைக்கு ஏதுவாம்.

இவ்வளவு அருமையான சிவாராதனையை விடுத்து வேறு கருமங்களை விரும்பிச்செய்தல் எதுபோலாகுமென்றால் நாயகன் டணியை விடுத்து வேறு பிறர்க்குப் பணிசெய்யும் தூர்த்தைபோலாகும். மேலும், சிவாராதனையை விட்டு வேறெந்தத் தருமங்களைச் செய்யினும் அவை சுகிர்தமாகா. இனிப்பலவிதமான தருமங்கள் தாமேன் ஏற்பட்டிருக்கின்றன? அவைகளுக்கெல்லாம் பலனில்லையாவென்றால், ஸ்திரீபுத்திரசகோதர சம்பத்தும் பசுக்கள்வீடு கிராமம்முதலியதிரவியங்களும் கிடைத்தாலும் அவற்றால் உண்டாகும் சுகம்லபியாது போவதுடன் துக்கமும் நேரிடும். இதனை அனுபோகத்தில் அறிந்து கொள்ளலாம்.

இனி, யாதேனும்ஒருசற்கருமத்தை அனுஷ்டிக்கவேண்டியவர்கள் கல்விவிவேகம் நன்னெறி ஈஸ்வரபத்தியுள்ள நல்லோர்கள் மூலமாக விசாரித்து அனுஷ்டிக்கவேண்டும். அவ்வாறின்றி ஒருவனைப் பார்த்து ஒருவர் அனுஷ்டிப்பது தீயது ஆகும்.

ஔவையார்.

"நூன்முறைதெரிந்து சீலத்தொழுகு"

சிலர்பொருளை இரட்சிப்பதே தருமமென்றும், சிலர் ஸ்திரீபுத்திரர்களை இரட்சிப்பதே தருமமென்றும், சிலர்சரீரத்தை இரட்சிப்பதே தருமமென்றும், சிலர்பாவம் ஏது, புண்ணியமேது சுகம்அனுபவிப்பதே தருமமென்றும் சொல்வார்கள்.

தானங்களிலுயர்ந்தது தருமம், தருமங்களில் உயர்ந்தது தவம்; தவத்திலுயர்ந்தது அன்பு; அவ்வன்புடன் மலைவனம் குகை முதலியவற்றிலும் பஞ்சாக்கினி மத்தியிலும் அனேககாலந் தவஞ்செய்பவர்களுக்குப் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்வார். மார்க்கண்டேயர் முத

லிய மெய்யன்புடைய அடியார்க்குப் பரமசிவன் அனுக்கிரகஞ்செய்தலுங்காண்க. ஆகையால், அன்பு செய்தவர்களுக்கே சர்வசிரேஷ்டமும் உண்டாகும். சுருதியைச் சத்தியமாக நம்பினவர்க்குத்தான் இது உண்மையென்பது விளங்கும்; அவர்களுக்குத்தான் நன்மையும் லபிக்கும்.

## திருவாசகம்.

காலமுண்டாகவேகாதல்செய்துய்ம்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
ஆலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

முற்றும்.

---

உ

சிவமயம்.

# சைவசமயநெறி.

"முக்கணிறைதருகரியைமுன்னடத்திப்பின்னதன்றாட்
பக்கமறைந்தேகுனர்வெம்பாசவிகல்நாசமுற
மிக்கவமர்விளைத்திளையாவீரரெனப்பூரணவூர்
புக்கிணையில்பராநந்தப்பூவையையுமேவுவரால்."

சைவர்களுக்குக் கடவுள் பரமசிவம். வைஷ்ணவர்களுக்குக் கடவுள் மகாவிஷ்ணு. ஸ்மார்த்தர்களுக்குக் கடவுளர் மகாவிஷ்ணு பரமசிவம். மாத்வர்களுக்குக் கடவுள் ஆஞ்சனேயர் மகாவிஷ்ணு. இப்படி ஒவ்வொரு சமயிகளுக்கும் கடவுளும் விதி விலக்குகளும் வேறு வேறாகவே இருக்கும். ஒன்றோடொன் றொவ்வாது. ஆகையால் ஒருசமயி மற்றொரு சமயிக்குச் சமாதானம் செய்வது அனாவசியம். நாம் புசிக்கும் கனி மதுரவஸ்துக்களைப் பொருள்கொடுத்து வாங்கிப் புசிக்கவேண்டும். அதுபோல இந்த உத்தமபயனாகிய வஸ்துவை உங்கள் மனமாகிய பொருளை இதில் கொடுத்துவாங்கிப்புசிக்கவேண்டும். மனமாகிய பொருளைக்கொடாவிட்டால் வாங்கிப்புசிக்க முடியாது. நாயகிக்கு நாயகனுடன் பிறந்த கனிஷ்டன், சிரேஷ்டன் அவன் பிதா முதலியோர் தன் நாயகிக்கு நாயகனாகமாட்டார். அதுபோல அவரவர்கள் வழிபடும் கடவுளுக்கு மற்றக்கடவுளைச் சமானமாகக்கொள்ளமாட்டார்கள். சைவத்தில் சைவர்கள்வழிபடுங்கடவுளாகிய சிவபெருமானையே மிகப்புகழ்ந்து பிரசங்கிக்கப்படும். ஆகம படனம் ஆகம அனுஷ்டானம் சிவதீக்ஷையில்லாதவர்கள் இந்திரன் சந்திரன் குபேரன் ஈசானன்முதலிய பல தேவர்களோடு பசுபதியாகிய சிவபெருமானும் ஒருதேவனென்றேகொண்டவர்கள். அவர்கள்மூலமாகச் சிவபெருமானது மகிமையைக்கேட்பவர்கள் நன்மையுமிழந்து விபரீதத்தையு மடைவார்கள். விபரீதத்தை அடைவானென்றால் தக்ஷப்பிரஜாபதிபலதேவர்களோடு சிவபெருமானும் ஒருதேவனென்றே மதித்துச்சாமானியமாக வசனிக்க அவனிடத்திலிருந்து அதைக் கேட்ட தேவர்கள்சூராதிகளால் அனேகயுகம் மிகத்துன்புற்றார்கள்.

### கந்தபுராணம்.

மெய்ம்மையதகன்றதக்கன்வேள்வியிலிருந்தபாவம்
நும்மிடையிருந்ததற்ருனேதகவுழந்தீர்மேனாள்
நம்மகனொருவன்வந்துஞ்ஞுகிவெஞ்சூனாக்காதி
இம்மெனவும்மைக்காப்பானெனப்புகன்றிறைவன்போனான்.

### மேற்படி, சயந்தனைத்தேற்றுபடலம்.

சிறுவிதிவேள்விநண்ணித்தீயவிநுகர்தற்பாவம்
முறைமுறைவீரன்செற்றும்முற்றவும்முடிந்ததில்லை
குறைசிலவிருந்தவாற்ருற்கூடியதுமக்கித்துன்பம்
அறுமுகப்பெருமானன்றியாரிதுதொலைக்கற்பாலார்.

சிவதீக்ஷையில்லாதவர்கள் அசம்பாவிதமாகப் பரமசிவனைப்பிரசங்கிப்பார்கள். அதாவது பார்வதி கல்யாணத்தில் பிராமணர்களுக்குப் பரமசிவம் நமஸ்காரம் செய்தாரென்றும் விஷபானம் பண்ணிய காலத்தில் பார்வதி லக்ஷ்மியை மாங்கல்யபிக்ஷைகேட்டாளென்றும், பார்வதியைப்பிரிந்த விசாரத்தால் சிவன் வடவிருக்ஷத்தில் யோகம் செய்தானென்றும், பிர்மதேவனது ஐந்தாம் சிரசை நகத்தினாற்கிள்ளியதனால் பிர்மஹத்தியடைந்தானென்றும், விபூதி, ருத்திராக்ஷம் சுமங்கலமல்லாமையால் அமங்கலிக்கே உரியவென்றும்பிரசங்கிப்பார்கள். பர்வதராஜன் பார்வதியைக்கல்யாணம்செய்துகொடுத்துஉடனேமருமகனாகிய சிவபெருமானுக்கு நமஸ்காரம் பண்ணினர்.

### கந்தபுராணம், திருக்கலியாணப்படலம், பாடல் 79.

அந்தணர்கரணமெல்லாமாற்றியேமுடிந்தபின்னர்த்
தந்தையுந்தாயுமாகியுலகெலாந்தந்தோர்தம்மை
முந்துறவயனும்பின்னர்முகுந்தனுமதற்குப்பின்ன
ரிந்திரன்முனிவர்வானோர்யாவரும்இறைஞ்சலுற்ருர்.

### பாடல் - 80.

அரனுடனுமையாள்தம்மையாங்கவர்பணிதலோடு
முருகெழுநிலையுட்கொண்டவுருத்திரத்தலைவரானோர்
பரிசனர்கணங்கள்யாரும்பணிந்தனர்தன்பின்னாகக்
கிரியுறையிறைவன்மைந்தன்கேளொடுவணக்கம்செய்தான்.

தேவலோகத்திலிருந்த மலையத்துவஜபாண்டியனைவரவழைத்து அவன் மனைவி காஞ்சனமாலையுடன் சமுத்திரஸ்நானம் செய்வித்துப் பின்னும் இருவரையும் தேவலோகத்திற்கு அனுப்பினர்.

க்ஷீராப்தியில் விஷம்வந்தகாலையில் பிரமவிஷ்ணுமுதலிய தேவர்களும் முனிவர்களும் அசுரர்களும் கைலாயத்தில்வந்து பரமசிவனிடத்தில் அடைக்கலம்புக,சமுத்திரம்போல் பெருகிவந்தவிஷத்தைக் கடுகளவாக்கி அதைப்புசித்து இவர்களை இரக்ஷித்தவர் பரமசிவன்.

கந்தபுராணம், தக்ஷகாண்டம் ததீசியுத்தரபடலம் பாடல் - 33.

மேல்வருங்கொடுவிடத்தின்முன்னுருகலும்வெருண்டு
சாலவங்கதுதாமரைக்கண்ணன்மேற்றாக்கி
மூலமுள்ளதோர்வச்சிரமணிநிறமுருக்கி
நீலவண்ணமேயாக்கியதவனுநின்றிலனல்.

பாடல் - 344.

வேற்றுருவாக்கியென்மெய்யிற்றாக்கலும்
ஆற்றலனகன்றனனனையர்தம்மொடே
ஏற்றமதானவெம்மிடர்கள்யாவையு
மாற்றுநர்யாருளர்மற்றுநீயலால்.

பாடல் - 347.

தீயெனவெழுதருசீற்றவெவ்விடம்
ஆயவைமாற்றியேயடியர்தங்களை
நீயருள்புரிகெனநீனிறந்திகழ்
மாயவனுரைத்தனன்வழுத்திநிற்கவே.

திருக்குற்றாலப்புராணம்.

பாரோடும்விண்ணோர்கள்பறந்தோடப்புரந்தரனார்பதிவிட்டோட்
தேரோடுங்கதிரோடமதியோடவிதியோடத்திருமால்மேனி [டால்
காரோடத்தொடர்ந்தோடக்கடல்விடத்தைப்பரமனுண்டுகோவாவிட்
ஆரோடுநீரிருப்பீரெங்கோடியுயிர்பிழைப்பீரறிவிலீர்காள்.

திரிலோகத்திற்கும் ஸ்திரீபுருஷாள்சேரும்படியாய்க்காமவிகாரத்தைச்செய்யும் மன்மதனைத் தகனம்செய்து அதன்பின்னர்ப் பார்வதிகல்யாணம் பண்ணினர். இரதிதேவிவேண்ட அவளுக்குஉருவமாகியும் உலகங்களுக்கெல்லாம் அங்கமில்லாத அனங்கனாகவும் அனுக்கிரஹம்செய்தார். சிவபெருமான் உமாதேவியைப்பிரிந்த காலத்தில் திரிலோகங்களும் ஆண்பெண்சேர்க்கையில்லாதிருந்தன.

## கந்தபுராணம் மேருப்படலம்.

காரணமுதல்வன்மோனக்காட்சியாலமரரெல்லாஞ்
சூரரமகளிர்தங்களேணைமுலேப்போகமின்றி
யாரிடர்நிலேமைதன்னேயடைந்தனர்அளக்கர்சூழ்ந்த
பாரிடையுயிருங்காமப்பற்றும்விட்டிருந்தவன்றே.

### மேற்படி,

ஆரணன்றனதுமைந்தர்க்கரும்பெறன்ஞானபோத
மோரிறைகாட்டுமுன்னருலகெலாமொருப்பாடொன்றி
யீருடன்முயங்குமார்வமின்றியேயிருந்தயார்க்குங்
காரணன்சிவனேயென்கைகழறவும்வேண்டற்பாற்ரோ.

பிர்மாவினது ஒருசிரசைக்கிள்ளியதற்குப்பிர்மஹத்திவந்ததென்பார்களாகில் பிர்மகற்பங்கள்தோறும் அவரைமுடித்து அவரது சிரங்களேமாலேயாகக் கோத்து அவரஸ்தியை அணியாக அணிபவர்க்கு முற்கூறியது அஸம்பாவிதமாகும்.

## கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்.

பரமனிவ்வகையடுந்தொறுமடுந்தொறும்பலவாம்
பிரமனுதியோரென்பினேத்தரிக்குமப்பெரியோர்
சிரமெலாம்தொடுத்தணியலாயணிந்திடுஞ்சிகைதன்
னுரமுலாவுமுன்னூலெனவேயணிந்திலங்கும்.

விபூதி ருத்திராக்ஷம் அமங்கலிக் குரித்தென்று சொல்வது அவிவேகம். ஒரு நாயகனுக்கு நாயகியாயுள்ளவள் அவனுள்ளவரையில் அவனடையாளமான மங்கலத்துடனிருப்பாள், அவனிறந்தபின் மங்கல நீங்கி அமங்கலத்தை யடைவாள். அதுபோல் பிரமாதிதேவர்களிறக்க அவர்களென்பு சிரத்தை மாலேயாயணிந்து தானிறவாத சிவபெருமானே நாயகனுக அடைந்தவர்கள் அணியும் விபூதி ருத்திராக்ஷம் நித்திய சுபமங்களமாகும்.

சிவப்பிரசாதம் புசிக்கலாகாதென்பார்கள் சிலர் அதைக்கேட்ட சைவர்கள் மனம் சலனப்படுகிருர்கள். உயர்விஞலேயா அல்லது இழிவிஞலேயா இரண்டிஞலும் கூடாததுண்டு. இதற்குத் தக்கவுபமானம் வேண்டும். கழுதைப்பால் புசிக்கலாகாது இழிவிஞல் கபிலே காராம்பசுவின் பால் புசிக்கலாகாது உயர்விஞல். நீசச்சேரியில் பிராம்மணுள் செல்லலாகாது இழிவிஞல். அக்கிராரத்தில் நீசர் செல்லலாகாது உயர்விஞல், அப்படிச்சென்ருல் இரண்டு

பேரும் தோஷத்தையடைவார்கள். சிவதீக்ஷைக் குரித்தல்லாதவர்கள் சிவப்பிரசாதம் புசிக்கலாகாது. சிவதீக்ஷைக்குரியார்கள் சிவப்பிரசாதம் புசிக்கலாம் மிகவும் நன்மை.

### பிரபுலிங்கலீலை.

தாய்க்குவழுவின்மகளிர்க்குத்தந்தைதனக்குப்பசுவிற்குச்
சேய்க்குமறையோர்தமக்கிடர்செய்தீர்வில்கொடியபாதகமும்
போக்குமிமைப்பில்கரணத்தைப்புனிதமாக்கிச்சிவமாக
ஆக்குமரன்தன்பிரசாதமாயினதற்குநிகருண்டோ.

தலைமைகொள்குருசிவசரங்கட்காகவென்
றுலையிடுமரிசியன்றேுங்கன்மத்தெறி
அலைகடலமுதமாம்தனக்கெனவாக்குறிற்
கொலைசெயுநஞ்சினுங்கொடியதாகுமால்.

குடிப்பனவிழுங்குவகூரெயிற்றினுற்
கடிப்பனநக்குவவனைத்துய்கைம்மலர்
அடுத்துளபரன்றனக்கர்ப்பித்துண்பவன்
விடுத்தவன்மேல்வரும்வினைகள்யாவுமே.

ஆகமவிதிப்படி சத்கர்ம காலங்களெல்லாம் விபூதி ருத்திராக்ஷதாரணமில்லாதவர்கள் சைவர்களல்லர். அந்தப் பூஷணமில்லாது செய்யும் கருமங்களுக்குப் பலன் நஷ்டமாகும்.

### உபதேசகாண்டம்.

யாதுதவமிழைத்தாராலுமிம்மணியோர்
போதுதரித்திலரேலத்தவமும்பொய்மையே
ஊதியுலோகமுருக்கியவர்சிந்தூரத்
தாதுகொடுத்திலரேலென்னுமத்தன்மையதே.

### விருத்தாசலபுராணம் விபூதிச்சருக்கம்.

சந்தவயன்நாரணர்பராசரர்வசிட்டர்
கந்தரெனவேதிசெயமாமுனிகள்நந்தி
அந்தமிலுணர்ந்துகருமந்தவமெவைக்கும்
வெந்தபொடிநீங்கினவைவீணெனவுரைத்தார்.

### தாயுமானசுவாமி.

கண்ணுவாரேனுமுனைக்கைகுவியாராயிலந்த
மண்ணுவார்நட்பைமதியேன்பராபரமே.

சைவர்கள் தாங்களனுஷ்டிக்கும் விதியின்னதென்றும் விலக்கின்னதென்றும், சைவசமயநூல்களைச்செவ்வையாய்விசாரணைசெய்வதை முற்றுங்கைவிட்டும் வேறு வேறுசமயநூல்களையும் விந்நியாசமான நூல்களையும் சதாவிசாரணை செய்து காலம்போக்கினவர்கள் என்செய்வார்கள்!

கந்தபுராணம் காசிபருபதேசப்படலம்.

சான்றவராய்ந்திடத்தக்கவாம்பொருள்
மூன்றுளமஹறயெலாம்மொழியநின்றன
ஆன்றதோர்தொல்பதியாருயிர்த்தொகை
வான்றிகழ்தளையெனவகுப்பரன்னவே.

நாயகிதனதுநாயகன் பணியைவிட்டு வேறு வேறுபலர்க்கு வேண்டிய பணிகளைச்செய்து வெகுவாய் வெகுபேர்க்குப் பணி செய்தேன் என்று இறுமாந்திருக்கும் பதிதைபோலாகும். சிவாராதனையைவிட்டுச் சைவர்கள் பலவானகாரியங்களைச்செய்து மகிழ்ந்திருப்பது. சைவர்கள் சிவாராதனையைவிட்டுப் பலவேறு கருமங்களைச் செய்பவர்களுக்குப் பலன்தானில்லையோவென்றால் உண்டு எவ்விதமா யுண்டென்றால் ஒருபொருளை அடைவது ஒன்று. அடைந்தபொருளை அனுபவித்தலொன்று. இவ்விரண்டின் அடைவதொன்றுமாத்திரமே யல்லது அனுபவித்தலிராது. அதிரூபவதியான மனைவியையடைந்தும் அவளாலடையும் சுகானுபவமுமின்றி அவளுக்குத் தாசனாகிக் கீழ்ப்படிய வேண்டியதாகும். தானே சகலசம்பத்தையடைந்தும் அதினாலடையும் பயனாகிய சுகமும் புகழும்புண்ணியமுமின்றி ஒவ்வொன்றினாலும் துக்கமும் தாபமும் லபிக்கும். இப்படிப் பயனற்ற பேறாக லபிக்கும் இவைகளெல்லாம் சைவசமயிகட்கேசொன்னதன்றி மற்றச்சமயிகளுக்கல்ல. மற்றச்சமயிகளைப்போலச் சைவர்கள் வேறுசமயத்தவர்களை விரும்பி அழைப்பதில்லை. ஒவ்வொரு சமயத்தவர்களும் அந்த அந்தச்சமயக்கடவுளுக்கே பரத்துவங் கூறுவார்களாகில் அதில் நமக்கோராக்ஷேபமுமில்லை. வேறு சமயத்தவர்கள் பரமசிவனுக்குப் பரத்வமில்லை யென்பார்களாகில் அவர்களுக்குச் சமாதானம் கூறுவது அனவசியம். ஒவ்வொருவர் பக்குவத்திற்குத் தக்க சமயமும் கடவுளும் ஏற்பட்டிருக்க அவைகளை ஒன்றுபடுத்தவு முடியாது. ஒன்றுபடுத்துவதும் அனவசியம். நம்மவர்கள் சலனப்பட்டு வேறுசமயத்திற் செல்லாமல் போதிப்பதுவே சுகிர்தமாகும்.

உ

கணபதி துணை.

# விரதமான்மியம்.

"கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையானேபோற்றி பெருங்கருணை போற்றி, வெள்ளேறுகொடியுயர்த்த விடையானேபோற்றி யருள் விகிர்தாபோற்றி, புள்ளேறுகொடியுயர்த்தபுனிதனயன்றேருத புனிதாபோற்றி, வள்ளேறுசிறுகுழவி மதிநுதலங்கயற் கண்ணி மணாள போற்றி."

இப்போது செய்யும் விரதானுட்டானங்களெல்லாம் ஒவ்வொரு கடவுளுக்குரிய, திதி, வாரம் நக்ஷத்திரங்களில், உபவாசம், பால், பழம், பலகாரம், அவிசு, ஏகபோசனஞ்செய்தலே அனுஷ்டானமாக இருக்கிறது. இப்படிச்செய்வதில் அந்தந்தக்கடவுளுக் குரியவந்தனம், வழிபாடு, ஜபம், தியானம், அக்கடவுளர்க்குரிய புராணசிரவணம் ஒன்றும் செய்கிறதில்லை. ஆகாரபேதங்களும் நிராகாரமும் பலகாரணங்களால் ஏற்படும். அவைகள் எல்லாம் விரதங்களாகா. விரதம் என்னும் பதத்திற்குக்காப்பது விரதமென்பது பொருள். அதாவது இன்னகாரியத்தையின்ன விதமாகவே செய்து முடித்த பிறகு போசனம், தைலம், தீட்சை, இவைகளைச்செய்து கொள்ளுகிறதென்று நியமித்து, நியமித்தபடியே செய்து முடிப்பதே விரதமென்பார்கள். இப்படிப்பலகாரியங்களுக்குண்டு. இத்தன்மையான விரதங்கட்குப்பலம் நிஷ்பலம். விரதக்கிரமங்களை விசாரியாமல்ஒருவரையொருவர் பார்த்து நடப்பதால் பலனில்லை. அப்படி விசாரித்த காலத்திலும், உண்மை வசனத்தைவிட்டு முகமனுயுரைத்த வசனத்தையே கைக்கொள்ளுகிறார்கள்.

முகமனாவது, தாகமுடையவர்கள் தடாகக்கரையை அடைந்தால் தாகந்தீர்ந்து விடுமென்பது முகமன். உண்மையாவது, தாகமுடையவர்கள் தடாகக்கரையை யடைந்து, கால், கை, முகம், வாய், ஜலத்தினால் சுத்தஞ்செய்து தண்ணீரைப்பருகினாற்றான் தீரும் என்பதுண்மை.

ஔவைவாக்கியம்.

நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு.

## அருணகிரியந்தாதி.

நடலையறுத்தாளருணைநம்பற்கன்பில்லாதா
ருடலையொறுத்தாலாவதுண்டோ—அடலைநூ
லோதினுற்பாசமொழியுமோபுற்றிலே
மோதினுற்பாம்புசாமோ.

ஆனவரநல்குநதியாயிரஞ்சென்ருடுகிலென்
தானம்பதினுறுந்தான்செயிலென்—ஆநங்க
ளஞ்சுடையார் சோணகிரியண்ணறனையெண்ணுத
நெஞ்சுடையார்பூதலத்தேநின்று.

கற்றதனுற்ருெல்லைவினைகட்டறுமோநல்லகுலம்
பெற்றதனுற்போமேபிறவிநோய்—உற்றகடல்
நஞ்சுகந்துகொண்டருளும்நாதரடித்தாமரையை
நெஞ்சுகந்துகொள்ளாதநெற்றி.

## கந்தபுராணம்.

முன்புதாருகவனத்தின்முனிவரர்யாருமீசற்
கன்பிலராகிவேள்வியளப்பிலபுரிந்துதாமே
இன்புறுமுத்திதன்னையெய்துவானுன்னியங்கம்
துன்புறவாளாநோற்றுத்துணிவினுலொழுகலுற்ருர்.

பரீக்ஷையளவுசம்பளமில்லை. உத்தியோகத்தளவுதான் சம்பளம். உத்தியோகமே இல்லாவிடில் சம்பளமேயில்லை. அதுபோல விரதானுட்டானங்களிலுபவாசம், ஆகாரபேதங்களாலும் பலமே இல்லை. அந்தந்தக்கடவுளின் வழிபாட்டினளவு தான்பலன்.

## கீதசாரம்.

விளக்குவிளக்கெனமொழியில் வெய்யவிருள்போய்விடுமோ
துளக்கமிலாவிளக்கேற்றத்தொலையுமிருளென்றவரோ.

விரதக்கிரமந்தான் யாது ? ஆகாரநிவர்த்தியா? கடவுள் வழிபாடா ? இவ்விரண்டுந்தான்.

காஷ்டத்தின் றன்மைபோல் அக்கினியினுஷ்ணமாகும். அதுபோல ஆகாரத்தின்றன்மைபோலக் காமக்குரோதாதி விர்த்தியும், க்ஷயமுமாகும். முன்காமக்குரோதாதிகளைச்சமனம் பண்ணிப் பின்னர்க்கடவுள்வழிபாடு செய்யவேண்டும். ஆகாரநிவர்த்தியானஉபவாசம் காமக்குரோதாதி தோஷம் முழுமையும் நிவர்த்தியாகும். மனவாக்குக்

காயங்களாலும் வழிபடல்வேண்டும். காயத்தினுல் புண்ணியதீர்த்த ஸ்நாநம் விபூதிருத்திராக்ஷதாரணம், பிரதக்ஷிண நமஸ்காரம், வந்தனம், பத்திரபுஷ்பத்தால் பூஜித்தல். வாக்கினுல், ஸ்தோத்திரம் கடவுள் நாமம் மந்திர உச்சாரணம். நேத்திரத்தால் தெரிசனம் சுரோத்திரத்தால் புராணசிரவணம். இவ்வளவுங் கூடியது விரதமாம்.

இவைகளுக்குத் துணைக்கருவியாகும் உபவாசமும் ஆகார பேதங்களும். முற்கூறிய ஆகாரபேதங்களில் பலகாரம் சோம்பல், நித்திரை, மயக்கங்களையுண்டுபண்ணுவதால் அதை முற்றுந்தள்ளவே வேண்டியது. மற்ற ஆகாரங்களும் அற்பமாக இருக்கவேண்டியது., இத்தன்மையான விரதானுஷ்டானஞ்செய்வது பிரயாசமாக இருக்கிறதென்று நினைத்து, அருசியாகக்கொள்ளாது, மிக விருப்பமாகக் கொள்ளவேண்டியது. அது எதுபோல் என்றுல், பயிர்செய்து வருஷமுடிவிற்பயனடைந்துசுகமாயிருக்கக்கருதியவர்கள் பயிர்செய்யுங் காலத்தில் வெயில் மழை, பனி, காற்று, பசிதாகங்களையும் சகித்துப்பயிர் செய்வதுபோல இவ்விரதங்களையனுஷ்டிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட சத்கருமங்களிற் பிரவேசிக்குங் காலங்களில் பாலுண்ணத்தும்பறுத்துக்கொண்டு பசுவினிடத்திற்குச் செல்லுங் கன்றுபோல்வாருக்குக் கன்றின்வாய் வைத்தமாத்திரத்தில் பாலைப் பொழியும் பசுவைப்போல் பரமேஸ்வரன் அருள் அமிர்தத்தைப் பொழிவார்.

### பிரபுலிங்கலீலை.

அல்லமன் புகன்ற மாற்றமப்பணன் சென்று நின்று
சொல்லலுந் துணுக்கென் றுள்ளஞ் சொற்றளர்ந் துடல்வியர்த்துப்
புல்லுவந் தணையுந்தாய் முன்பொருது தும்பறுத்திட்டோடும்
நல்லிளங்கன்றுபோல நான்செலாதிருந்தேனென்றுன்.

விரதங்கள் ஐந்து பேதமாயிருக்கும். அதின் பலன்களுந்தாரதன்மையனவாயிருக்கும். இதில் முதற்பாகமாகிய விரதம் எவ்விதமென்றுல்: காலை5-மணிக்குமுன்எழுந்து பரமசிவத்தியானஞ்செய்து பின்பு மலஜலங்கழித்துத் தந்தசுத்திஸ்நாநஞ்செய்து, விபூதி ருத்திராக்ஷதாரணம்பண்ணிக்கொண்டு,அவரவர்கள்செய்யுங்கர்மானுஷ்டானங்கள் முடித்துப் புண்ணிய தீர்த்தக்கரையையடைந்து, காமக்குரோதாதி சித்தவிர்த்தியை விட்டு மனவாக்குக்காயம்மூன்றும் ஒன்றுபட்டுச் சங்கற்பஞ்செய்து புண்ணிய தீர்த்தத்திலிறங்கி பூமியிலுள்ளபுண்ணியதீர்த்தங்களிலெல்லாம்ஸ்நாநஞ்செய்தபலனை இந்தத்

தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்தமாத்திரத்தில்பாலிக்கவேண்டுமென்றுபரமசிவனைப்பிரார்த்தனை பண்ணி, ஸ்நானஞ்செய்து கரையேறிப் பூசைமுடித்துவிபூதிருத்ராக்ஷதாரணத்துடன்சிவாலயத்துட்சென்று பிரதக்ஷிணம் நமஸ்காரம் தோத்திரம் தெரிசனம் அருச்சனை முதலியன செய்த பின்பு கிரகஞ்சென்று மந்திரசெபம் புராணசிரவணஞ்செய்தல், சாயங்காலம் சந்தியாகாலத்தில் அனுஷ்டானம் - ஜெபம் - தியானம்செய்து பின்பு கடஸ்தாபிதம்செய்து, பொன்னினால், அல்லது வெள்ளியினாற் செய்த உமாமகேஸ்வர பிரதிமைக்குப் பால். தயிர், இளநீர், பழம் முதலிய அபிஷேக திரவியங்களால் அபிஷேகம்செய்து, பூமாலையால் அலங்கரிக்கப்பட்ட விதானமுடைய வேதிகைமண்டபத்தில் தோடு தண்டைமாலையுடன் அலங்கரித்து க்ஷீரான்னம், தேங்காய், பழம், முகவாசத்துடன் தாம்பூலாதி நிவேதனம், தூபதீப சோடசவுபசாரத்துடன் நாலு யாமமும் பூசித்து வில்வத்தால் சகஸ்திரநாம அருச்சனை, ஒமம்-பூர்ணாகுதி செயல்வேண்டும். இவைகள் தங்கள் குலாசாரியார் அல்லது சிவத்விஜானைக்கொண்டு செய்வித்துப் பூசைமுடிந்தவுடனே மிக்க வன்பினால் மனமுருகித்தோத்திரஞ்செய்து தங்கள் மனோபீஷ்டங்களைப்பிரார்த்தித்து மறுநாள்காலையில் முதனாளிற்செய்தவைபோல முழுதும் செய்து பின்பு குலாசாரியருக்காவது அல்லது சிவத்விஜானுக்காவது பிரதிமையைத் தக்ஷிணையுடன் தானஞ்செய்து, பின்பு கடவுள் வேதியர்களுக்குத் தங்காளாலியன்றமாத்திரம்தானஞ்செய்து முதற்சாமம் சென்றபின் மறுஜாமத்துக்குள் சிவனடியார்கள் பந்துக்களுடன் பாரணைசெய்து பகலில் இரண்டாவது ஆகாரமும் நித்திரையும் செய்யாதிருத்தலே பிரதமபாகமாகும். இரண்டாவது பாகமாவது? இரவு நாலுகாலமும் பூசித்தல் கடஸ்தாபிதம் ஹோமம் பூர்ணாகுதி செய்தல் முதலியன நீங்கலாக முன்சொல்லியபடி இராப்பகல் ஆகார நித்திரையில்லாது உபாசித்தல் ஆலயதரிசனம், மந்திர ஜெபம், புராணசிரவணம் செய்தல் இரண்டாவது பாகமாகும்.

மூன்றாவது: மேற்சொல்லியபடி ஆலயதரிசனம் ஜெபம், புராணசிரவணம் செய்தல், இரவில் முதற்ஜாமம் சென்ற இரண்டாம் ஜாமத்தில் ஆசனமின்றிச் சயனித்தல் மூன்றாவதுபாகமாகும்.

நான்காவது: மேற்சொல்லியயாவும் பகலிற் சிவலிங்கதெரிசனம்-மந்திரம் ஜெபம்புராண சிரவணம்செய்து இரவில் முதற்ஜாமம் சென்ற மறுஜாமத்தில் லவணவர்ச்சிதமான சுத்தான்ன அவிசுபுசித்தல் ஆசனமின்றிச் சயனித்தல் நான்காம்பாகமாகும்,

ஐந்தாவது-முற்சொல்லிய பிரகாரம் பகலில் ஆலயதெரிசனம் மந்திரஜெபம் - புராணசிரவணம்செய்து பகல் இரண்டு ஜாமம் சென்றபின் ஷட்வகை ரசங்களுடன் அற்பாகாரமாய்ப் போசனம் செய்து இரவு சிவாலயதரிசனம் செய்து இரண்டாம் ஜாமத்தில் சயனம் செய்து கொள்ளல் ஐந்தாவது பாகமாகும்.

விரதங்கள் அனுஷ்டிக்கும் தினத்தில் மேற்சொல்லிய பிரகாரம் சற்கருமானுட்டானங்களைத்தவிர வேறுயாதொரு காரியங்களையும் செய்யக்கூடாது. இவ்விதமாக விரதானுட்டானம் அனுட்டிக்கின்றவர்கள் அடையும் பயன் யாதென்றால்: அவர்கள் மனோபீஷ்டம் எதுவோ அது முழுதும் கைகூடும். தரித்திர நிவிர்த்தி-வியாதி நிவிர்த்தி - சத்துருஜெயம் கல்வி - சுகபோகம் - புத்திரப்பேறு-கல்யாணம் - இவைகளில் எதை விரும்புகிறார்களோ அதுகைகூடும்.

மேற்சொல்லியவசனங்களுக்கெல்லாம்சுருதியுண்டோ? உண்டு.

### திருவிளையாடல்.

வைகறையெழுந்துசேற்கண் மணாளனை யுள்ளியற்றைச்
செய்கடனிறீஇக்காமாதிசிந்தைநீத்தலர்பொற்கஞ்சப்
பொய்கையையடைந்துகையிற்பவுத்திரம்புனைந்துவாக்கு
மெய்கருத்தொருப்பாடெய்திச்சங்கற்பம்விதந்துகூறி

கடம்படிமுளைத்தமுக்கட்கரும்பினை நினைந்துஞாலத்
திடம்படுதீர்த்தமெல்லாமாடியபயனையீண்டுத்
திடம்படத்தருதியென்னாத்திரைத்தடம்படிந்துவெண்ணீ
றுடம்பணிந்தக்கமாலையொளிபெறவிதியாற்றாங்கி

காலையிலாசான்சொல்வழிநித்தக்கடன்முடித்துச்சிதொட்டங்கி
மாலையினளவும்புராண நூல்கேட்டுமாலைதொட்டியாமமோர்நான்கும்
சேலனகண்ணாள்பங்கனைப்பூசைசெய்கவப்பூசனைமுடிவில்
மூலமந்திரநூற்றெட்டுநூற்றெட்டுமுறையினலாகுதிமுடித்தல்.

### கந்தபுராணம்.

ஐந்தமுதாவினைந்துநறுங்கனியைந்துசெந்தேன்
சந்தனதோயம்புஷ்பம்தண் புனல்மணிநீராடி
சுந்தரவெண்பட்டாடைகற்பூரசுன்னஞ்சாந்தம்
சந்தமல்லிகைமுன்னானவெண்மலர்க்கண்ணிசாத்தி.

காசணிபொலன்பூண்சாத்திக்கணைகழலாதியங்க
பூசனைசெய்துசேற்கட்பூரணபராயையவ்வா
றீசனைந்தெழுத்தைப்பெண்பாற்கிசையவுச்சரித்துப்பூசித்
தாசறுசுரபித்தீம்பாலட்டவின்னமுதினோடும்.

பண்ணியவகையாணீயநிவேதனம்பண்ணிவாச
நண்ணிபவடைக்காய்நல்கிநறுவிரைத்தூபதீப
மெண்ணியவகையாற்கோட்டிக்கண்ணடியேனைமற்றும்
புண்ணியன்திருமுன்காட்டிவில்வத்தாற்பூசைசெய்தல்.

வில்வமாயிரங்கொண்டாயிரநாமம்விளம்பிநால்யாமமுஞ்சாத்த [த
னல்லவைந்தெழுத்தாலைந்தெழுத்துருவினாதனுக்கருக்கியங்கொடுத்
லெல்லையின்மூலமந்திரத்தாலுமேனைமந்திரங்களினாலும்
வில்லழலோம்பிப்பூரணாகுதிசெய்தீறில்வான்வேள்வியைமுடித்தல்.

அடியனேன்செய்யுங்குற்றமன்றைக்கன்றனந்தமாகும்
கொடியநஞ்சமுதாய்க்கொண்டாய்குற்றமுங்குணமாய்க்கொண்டு
படியெழுதரியமங்கைபங்கனேகாத்தியென்று
முடியுறவடியில்வீழ்ந்துமும்முறைவலஞ்செய்தேத்தி.

வன்மனங்களையவின்றுவேண்டியவரங்கள்வேண்ட
நன்மணப்பேறுமக்கட்பேறுநல்வாக்குங்—கல்வி
பொன்மனைகாணியோகந்தெவ்வரைப்புறகுகாண்ட
லிம்மையிலரசுமற்றுமெண்ணியாங்கெய்துமன்றே.

புலர்ந்தபின்நித்தவினைமுடித்தரம்பைபொதுளும்பாசிலைபதின்மூன்
னலந்தருதூவெள்ளரிசிபெய்தினியநறியகாய்கறியொடுபரப்பி [றி
அலந்தரவான்பாளிறைகுடம்பதின்மூன்றரிசிமேல்வைத்தரனடியிற்
கலந்தவன்பினராய்ச்சிவார்ச்சனைக்குறியாகவுள்வேதியர்களைவரித்து

காதணிகலனுங்கையணிகலனுங்கவின்பெறவளித்தரனாக
வாதரம்பெருகவிளைத்தருச்சனைசெய்தாரியதத்வினையொடும்பாசப்
போதணிகாப்புவிசிறிதண்கவிகைபூந்துகின்முதற்பலவுடனே
மேதகுதானஞ்செய்துபின்குருவைக்கற்புடைமின்னிடையோடும்.

ஆசனத்திருத்திப்பொலந்துகில்காதுக்கணிகள்கைக்கணிகளுமணிந்
வாசநன்மலரிட்டருச்சனைசெய்துமலைமகடலைவனைவணைந்து [து
பூசனைசெய்தபடிமையோடம்பொன்பூதலம்பதாதிகள்பிறவுந்
தூசலர்மாலைகோட்டணிபுனைந்தசுரபிமாதானமும்செய்து.

இனையவாறுத்தாபனமுடித்தாசானேவலாற்சிவனடிக்கன்பர், தனையரோடொக்கலுடனமுதருந்தறகுதியிவ்விரதமுன்கண்ண,னனையதாமனையோனிந்திரன்முதல்வானுடவர்மூவறுகணத்தோ, ரனைவருநோற்றூர்மனிதருமனுட்டித்தரும்பெறற்போகம்வீடடைந்தார்.

பொருவிலிவ்விரதமைவகைத்துச்சிப்போதிலூணிரவிலூணிரண்டு, மொருவுதலுறங்காதிருத்தலர்ச்சனைநால்யாமமுமியற்றுதலென்னக்,கருதிலிவ்வைந்துமொன்றினுக்கொன்றுகழியவுமதிகமாய்நோற்கும், வருடமொன்றிரண்டுமூன்றுபன்னிரண்டுவருடம்வாழ்நாளளவிவற்றுள்.

உடலளவெண்ணிநோற்பவர்முந்தவுத்தியாபனம்செய்துநோற்கக்
கடவரவ்வருடக்கட்டளைக்கிறுதிகழிப்பதுத்தாபனவிதிதான்
மடலவிழ்மாலைமண்டபங்குண்டமண்டலம்வகுத்துமாபதியைப்
படரொளிவெள்ளிமுப்பதுகழஞ்சிற்படிமையாநிருமிதஞ்செய்து.

## தோத்திரம்.

பங்கயற்கணரியபரம்பரனுருவேதனக்குரியபடிவமாகி, யிங்கயற்கணகனுலகமெண்ணிறந்தசராசரங்களீன்றாந்தாழாக், கொங்கயற்கண்மலர்க்கூந்தற்குமரிபாண்டியன்மகள் போற்கோலங்கொண்ட, வங்கயற்கணம்மையிருபாதப்போதெப்போதுமகத்துள்வைப்பாம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தவத்தின்மகிமை.

"சித்திதரும்புத்திதருஞ்செந்திருவைச்சேர்விக்கும்
பத்திதருமெய்ஞ்ஞானம்பாலிக்கும்—கொத்தி
அரிமுகனைக்காய்ந்த அருணேசர்தந்த
கரிமுகனைக்கைதொழுதக்கால்"

திருக்குறள்.

"வேண்டியவேண்டியாங்கெய்தலால்செய்தவம்
மீண்டுமுயலப்படும்."

அதுயாதென்றால், பொருளையெவ்விதமான பிரயாசைப்பட்டாகிலும் தேடிக்கொள்வார்களாகில் அவர்கள் தாழ்வெல்லாம் நீங்கும்; உயர்வெல்லாமுண்டாகும். துக்கமெல்லாம் நீங்கும் சுகமெல்லாமுண்டாகும். தாங்கள் விரும்பியதெல்லாம் ஒருங்கேலபிக்கும்.

திருக்குறள்.

ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொருள்
ஏனையிரண்டுமொருங்கு.

அத்தன்மையானபொருளைத்தேடுபவர்கள் தங்கள் குலசிரேஷ்டம், சரீரசவுகரியம், கௌரதையும், பொருளாகமதியாது இவை யாவையும் கைவிட்டுப் பொருளையேபொருளாகக்கருதித் தேடிக் கொள்வார்கள். அப்படிப்பொருளைத்தேடிக்கொண்ட பின் அவர்களடையும் மேன்மையை அனுபவத்திற்றெரியலாம்.

திருக்குறள்.

பொருளல்லவரைப்பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லைபொருள்.

அந்தப்பொருளோ ஓரிடத்திலிருக்கும். தான் சென்ற விடங்களுக்கெல்லாம் செல்லாது, அதுவும், தம்முடைய சரீரம் உள்ளவளவும் இருக்குமென்பது நிச்சயமல்ல இடையிலும் போய்விடும். பொருளிருக்க அதையனுபவிக்கும் முன்னமே இடையில் சரீரமும் போய்விடும். இப்போது சொல்லும் தவப்பொருளோ நித்தியமாயுள்ள ஆத்மாவைப்பற்றிக்கொண்டு இனியெடுக்கும் சரீரங்களிலெல்லாம் பயனைக்கொடுக்கும். பொருளினாலடையக்கூடாத வஸ்துக்களையும் கொடுக்கும், அது யாதென்றால் உத்தமஸ்திரீ,சற்புத்திரன், திவ்விய சரீரம், கல்வி, விவேகம், நன்னெறி, சற்சங்கம், ஈஸ்வரபக்தி, இவைகளை யெல்லாம் கொடுக்கும், பொருளோ நன்மைக்குச்சத்துரு அது எவ்விதம்? உயர்ந்த வஸ்திராபரணம் களபகஸ்தூரிகளை அணிந்துகொண்டு பரமசிவசன்னிதானத்துக்குச்சென்ற மாத்திரத்தில், பிரதக்ஷிணம் செய்யவும், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யவும், வணக்கவொடுக்கமாய் அஞ்சலி அஸ்தம் செய்யவும். நாணமடைந்து கூசி இந்த நன்மைகளைத்தடைசெய்யும். இன்னமும் நல்லோர் பெரியோர்கள் இடத்தில் தன்னைச்செல்லவொட்டாது. அவர்கள் நம்மிடத்தில் சென்றாலும் அவர்களை வணங்கவும் உபசரிக்கவுமின்றி இறுமாந்திருக்கச்செய்யும், தனது தந்தை, தமையன் முதலியோர்களைத் தனக்குக் கீழ்ப்பட்டவர்களாக அவமதிக்கும், இவைகளெல்லாம் விவேகமில்லாத அவிவேகிகளுக்குரியவேயல்லது விவேகிகளுக்கல்ல. அநித்தியமான சரீரத்திற்கு, இராக்காலத்திற்கு வேண்டியதைப் பகற்காலத்தில்தேடிக்கொள்வதும்மழைகாலத்திற்கு வேண்டியதைக் கோடை காலத்திற்றேடிக் கொள்வதும், வயோதிககாலத்திற்கு வாலிபகாலத்தில் தேடிக்கொள்வதும் இயற்கையாயிருக்கிறது. அப்படிச்சரீரம் இராக்காலம் வரையிலும் மழைகாலம் வரையிலும், வயோதிககாலம் வரையிலும் இருப்பது நிச்சயமல்லாதிருக்க அக்காலத்திற்கு வேண்டியதைத்தேடிக்கொள்வது மாத்திரம் நிச்சயமாயிருக்கிறது.

### திருக்குறள்.

நெருநல்உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு.

நித்தியமான ஆத்மாவுக்கு மறுமையுண்டென்று நிச்சயமிருக்க மறுமைக்கு வேண்டுவதைத் தேடிக்கொள்வது அவசியமல்லவா?

ஆத்மாவைச்சரீரம் தாங்கிக்கொண்டிருக்கிறதோ, சரீரத்தை ஆத்மாதாங்கிக்கொண்டிருக்கிறதோவென்றால், வீட்டைப்புருஷன்

தாங்கிக்கொண்டிருக்கின்ருனே புருஷனை வீடுதாங்கிக்கொண்டிருக்கிறதோ வென்றசங்கைபோலல்ல.

மூங்கில், துணி, காகிதங்களால் செய்த பொம்மைப்பூதத்திற்குள்ளாக ஒரு புருஷனிருந்து தூக்கிக்கொண்டாடுவதுபோல ஜடமான சரீரத்துக்குள் சித்தான ஆத்மாபுகுந்துகொண்டு சரீரத்தைத் தூக்கிக்கொண்டிருப்பதன்றியும், சரீர அசுத்சத்தையும், சுத்தம் செய்துகொண் டிருக்கிறது. அச்சரீரத்தை ஆத்மா கைவிடுமாகில் பிரேதமாய் விடுவதன்றி அசுத்தமேலிட்டு அழுகி, ஒழுகி, ஊரிற்கிடக்க ஒட்டாவுபாதியாகும்.

### திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

நடலைவாழ்வுகொண்டென்செய்தீர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினரவர்ஊர்முனிபாண்டமே.

### தாயுமானசுவாமிகள்.

தோற்பாவைநாலாட்சுமையாகும்சீவனென்றிங்
காற்பாலெடுத்ததெவராலேபராபரமே.

தனக்குமிஞ்சினது தருமமென்ற வாக்கியத்திற்கு அர்த்தம் யாதென்ருல், தானென்பது சரீரமல்ல ஆத்மாவாகும். சதா ஆத்மலாபமான கருமங்களைச்செய்து கொள்ளுவதே அவசியமாகும்.

தவத்தின் சொரூபம் சுகம், பவத்தின் சொரூபம் துக்கம். இது சகலருடைய அனுபவமாகும். எவ்விதமென்ருல் துக்கமனுபவிக்கும் காலங்களிலெல்லாம் நான் செய்தபவமென்பார்கள். சுகமனுபவிக்கும் காலங்களிலெல்லாம் நான் செய்ததவமென்பார்கள், இதுவேயனுபவம்.

யானைமேல் தங்க அம்பாரியிற்செல்லும் ராயர் பக்கத்தில் வெள்ளியம்பாரியிற் கூடவரும் மந்திரியைப்பார்த்து நான் செய்ததவம் போல் இவன் யாது செய்தான் நமது வேலைக்காரன் நம்மோடு சமானமாக வருகிருனென்று, எண்ணி ராயர் அப்பாசியென்ருர் அப்பாசி தவசுப்பிள்ளையென்ருன், அதுயாதுபொருள், நீர் தவஞ்செய்யுங்காலத்தில் அத்தவத்திற்குரிய வேலைக்காரனுயிருந்தான் என்ற தாற்பரியம். கிறிஸ்தவர்,மகம்மதியர் முதலியவர்களும் ஆதிவாரம் குருவாரம் சுக்கிரவாரம் சனியிலும், தினம் மூன்றுகாலம் கடவுளை வழபடக்

கண்டோம். நம்மவர்கள் சோமவாரம் சுக்கிரவாரபிரதோஷ முதலிய சுபதினங்களிலும் கடவுளை வழிபடாது நாம் எவர்களிலும் அதிகம் என்று சொல்லுவது எவ்விதம்?

நாம்பாவமும் செய்யவில்லை புண்ணியமும் செய்யவேண்டுவதில்லையென்று சிலர் சொல்லுவார்கள். அது கூடாது. அதேனென்றால் அரசனுக்குட்பட்ட குடிகள் அரசன் கட்டளைப்படி, செய்யும்படிசொன்னதையும், செய்யவேண்டும். செய்யாதே யென்றதையும் செய்யக்கூடாது. அந்தக்கட்டளைப்படி நடவாதவர்களைத்தண்டிப்பான். இந்த அசுத்த வஸ்துக்களைப் புசிக்காதே யென்றபடி புசிக்கக்கூடாது.

இந்தக்கிரகத்தை வெள்ளையடித்துச்சுத்தஞ் செய்யென்றபடி சுத்தஞ்செய்யவேண்டும். முன்னாற்சொன்னதும் இவர்கள் நன்மைக்குத்தான், பின்னாற்சொன்னதும் இவர்கள் நன்மைக்குத்தான் இரண்டில் ஒன்று தவறினாலும் அரசன் தண்டிப்பான்.

வைராக்கிய தீபம்.

அரையன்வாயுரைகள்வரைதருமுடங்கலதுவரக்காணின்மற்றவனுடரையின்வாழ்பவருண்ணடுங்கிஓர்ந்ததன்வாய்ச்சாற்றிய முறைசெய்வாரென்றாற்-கரையில்பேரின்பந்தரவெமக்கிறைசொல் கட்டுரையெனின்வேறென்னை - உரையுளவேதாகமமவனெனக்கண்டுரைத்தவாபுரிகுவதல்லால்.

தவத்தினால் சுகமும், பொருளும், புகழும் புண்ணியமும். இந்நான்கும் லபிக்கும்.

நைடதம். நளன் தூதுப்படலம்.

விரும்பியதனைத்தும் நல்கும்மேதகுதவத்தின்மாய்ந்தோர்
திருந்தெழில்யாக்கைபெற்றுத்திகழ்வரென்றுரைக்கும்நீராற்
கரும்புறழ்கிழவிபாகன்கட்டழற்பாய்ந்துதுஞ்சி
அரும்பெறல்யாக்கைபெற்றகாமனேவறிகிலேயால்.

அரிச்சந்திரபுராணம்.

சித்திரம்போலமன்னனிருந்தனன்திகைத்துமானோர்
உத்தரமுரையாளுகிஉள்ளுளேமகிழ்ச்சிபொங்க
அத்திரவிழியாள்மேனுளருந்தவமுடையளாகின்
இத்திருபுயமும்மார்பும்மெய்துமென்றெண்ணிநைந்தான்.

### கந்தபுராணம் திருமணப்படலம்.

சாற்றினிங்கினியாவதென்னையன்மீ
ரேற்றின்மீதுவந்தென்னை மணந்திட
மாற்றிலாதமலைமகள்போலநாம்
நோற்றிலோமெனநொந்துயிர்ப்பார் சிலர்.

### திருவிளையாடல்.

நங்கையென்னோற்றாள்கொல்லோநம்பியைத்திளைத்தற்கென்பார்
மங்கையைமணப்பானென்னோவள்ளல்நோற்றானென்பார்
அங்கடிமதுரையென்னோவாற்றியதவந்தானென்பார்
இங்கிவன்வதுவைகாணவென்னநாம்நோற்றோமென்பார்.

தென்னவன்வருந்திமேனாட்செய்தவப்பேறாற்பெற்ற
தன்மகள்வதுவைகாணத்தவஞ்செய்தானிலனேயென்பார்
கன்னிதன்னழகுக்கொத்த அழகனிக்காளையென்பார்
மன்னவனிவனேயன்றிவேறிலைமதுரைக்கென்பார்.

### கந்தபுராணம் - காசிபனுபதேசப்படலம்.

ஆற்றலிற்றம்முடலலசப்பற்பக
னோற்றவரல்லரோநுவலல்வேண்டுமோ
தேற்றுகிலீர்கொலோதேவராகியே
மேற்றிகழ்பதந்தொறும்மேவுற்றோரெலாம்.

### நகர்புகுபடலம்.

நாடிமேலெழத்தசையிலாதுலரியேநரையாய்க்
கோடுபெற்றிமூத்தசைந்திடுவோரையும்கூற்றால்
வீடுவோரையும்பிணியுழப்போரையுமிடியால்
வாடுவோரையும்கண்டிலமிதுதவவலியே.

ஒருவன் பொருள்வேண்டினால் ஒரு துரையை அடுத்துத்தான் வேண்டியபொருளைக்கேளாமல்உத்தியோகத்தைக்கேட்கிறான் அந்த உத்தியோகம் கிடைத்த மாத்திரத்தில் தான் விரும்பிய பொருள் தானே கிடைக்கும் அதுபோலத் தவங்கிடைத்தால்தான்வேண்டிய தியாவும் கிடைக்கும்.

### தாயுமானசுவாமிகள்.

பவம்புரிந்திடும்பாவியேற்குஅருணிலைபதியத்
தவஞ்செயும்படிதயவுசெய்தருள்வதேதகும்

அவம்புரிந்திடார்க்குஆனந்தஅமுதத்தையளிக்கும்
நவங்கொடத்துவத்தினையெறிகடலெனும்நலத்தோய்.

ஆகையால் எல்லாவற்றையும் கொடுக்கக்கூடியதும் தன்க்குச் சமானமில்லாததும், தன்க்குத்தானே சமானமாய் ஒன்றாக விளங்கும் தவத்தை அருமையான மானுடசரீரத்தைப்பெற்றவர்கள் அதிவிரைவில் செய்யவேண்டும்.

சங்கப்புலவராகிய கபிலர்கவல்.

ஒன்றேசெய்யவும்வேண்டும்ஒன்றும்
இன்றேசெய்யவும்வேண்டும்இன்றும்
இன்னேசெய்யவும்வேண்டும்இன்னும்
நாளைநாளையென்பீராகில்
நம்முடைமுறைநாளாவதுமறியீர்
நமனுடைமுறைநாளாவதுமறியீர்
யெப்போதாகிலும்கூற்றுவன்வருவான்
அப்போதந்தக்கூற்றுவன்தன்னைப்
போற்றவும்போகான்
பொருளொடும்போகான்
சாற்றவும்போகான்
தமரொடும்போகான்
நல்லாரென்னான்
நல்குரவறியான்
தீயாரென்னான்
செல்வரென்றுன்னான்
தரியான்ஒருகணம்தறுகணாளன்.

ஆகையால் இவ்வருமையான மானுடயாக்கையைப்பெற்றவர்கள் அருந்தவத்தைச்செய்து பரமசிவனுடைய திருவடிப்பேற்றையடையுமாறு திருவருளைச்சிந்திக்கின்றேம்.

முற்றும்.